# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 14.06.2022 supeedsam.com supeedsam@gmail.com







# பிரதமர் ரணிலின் தவறான புரிதல் எனது உயிருக்கு ஆபத்து

## ரணிலுக்கு கடிதம் அனுப்பினார் சாணக்கியன்!



தனது நாடாளுமன்ற உரை தொடர்பான பிழையான புரிதல் காரணமாக தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கடந்த மே மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை மீளப்பெற வேண்டும் என பிரதமர் ரணில்

02 ஆம் பக்கத்தில்...

# இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன

## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50 வது அமர்வில் பீரிஸ் விஷேட உரை

ஜெனீவாவில் இன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50வது அமர்வில் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் விஷேட உரை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

அவர் தனது உரையில்,

எமது முன்னேற்றம் மற்றும் சவால்களை திறந்த பரிமாற்றத்தில் இலங்கை தொடர்ந்தும் இந்த சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஏனைய உறுப்புக்களுடன

02 ஆம் பக்கத்தில்...



# பசிலின் பதவி விலகலுக்குப் பின்னால் பாரிய திட்டம்?

பசில் ராஜபக்ஷவின் பதவி விலகலுக்குப் பின்னால் பாரிய திட்டம் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிளவுபடுவதை தடுப்பதும், அக்கட்சியின் மூலம் அரசாங்கத்தை வழிநடத்துவதும் பசில் ராஜபக்ஷவின் திட்டம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்மிக்க பெரேரா தனது நிறுவனத்தில் இருந்து இராஜினாமா செய்த போதிலும் அவர் தனது உரிமைகளை விட்டுக்கொடுக்கவில்லை என வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

# இனவாதத்தை தூண்டவே குருந்தூர் மலையில் பௌத்த விகாரை!





நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவல நிலைக்கு எதிராக எழுச்சிபெற்றுள்ள மக்கள் போராட்டத்தை திசைதிருப்ப இனவாதத்தைக் கையிலெடுத்துள்ள அரசாங்கம் தனது முழுமையான அனுசரணையுடன் குறுந்தூர்மலையில் நீதிமன்ற தடையையும் மீறி கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரையில் கடந்த நேற்று புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்ய முயற்சித்துள்ளது.

பிரதேச மக்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக அந்த முயற்சி தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டிப்பதுடன்,

02 ஆம் பக்கத்தில்...

# ராஜபக்சக்களின் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது

## நாமல் நம்பிக்கை

ராஜபக்சக்கள் தத்தமது சுயவிருப்பத்தின் பிரகாரம் பதவிகளிலிருந்து விலகலாம். ஆனால், அவர்களின் அரசியலுக்கு ஒருபோதும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச எம்.பி. தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



# ஜனாதிபதிக்கு சாதகமாக காணப்படும் 21 ஆவது திருத்தம்!

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்ந்தும் ஜனாதிபதிக்கு சாதகமாகவே காணப்படுவதாகவும், அவருக்கு பாதகமான நிலை காணப்படவில்லை எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜனாதிபதி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய

05 ஆம் பக்கத்தில்...

# பேர்டினாண்டோ இராஜினாமா: இலங்கோன் நியமனம்

இலங்கை மின்சாரசபை தலைவர் பெர்டினாண்டோ இராஜினாமா - பிரதித் தலைவர் நலிந்த இலங்ககோன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவில் (கோப்) தெரிவித்த கருத்தை வாபஸ் பெறுவதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பெர்டினான்டோ அறிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதி தன்னை

05 ஆம் பக்கத்தில்...

# இராணுவத்தின் துணையுடன் இன மோதலை உருவாக்கும் தேரர்கள்



ஆக்கிரமிப்பை நேரடியாக களத்துக்கு சென்று தடுத்து நிறுத்திய எம்பீக்கள் கஜேந்திரன் செல்வராசா, வினோநோகராதலிங்கம் மற்றும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் பாராட்டுக்குரியவர்கள் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

02 ஆம் பக்கத்தில்...







## இனவாதத்தை தூண்டவே குருந்தூர் மலையில் பௌத்த விகாரை!

அரசாங்கத்தின் இன்றைய பொருளாதார வீழ்ச்சி எத்தகைய மனிதபிமானச் செயற்பாடு என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

2008-2009ஆம் ஆண்டுகளில் நடந்த யுத்த இறுதிகாலத்தின் பொழுது, இது மனிதாபிமானத்திற்கான ஒரு யுத்தம் என்று உலகத்திற்குக் காட்டுவதற்காக, இராணுவத்தினரின் ஒரு கையில் துப்பாக்கியும், மறுகையில் பாடசாலை சிறுமியின் படத்தையும் காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதன் மூலம் இலங்கை இராணுவம் சிறுவர்களின் கல்வி தொடக்கம் அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகளிலும் அக்கறை செலுத்துவதாக உலகத்திற்குக் காட்ட இலங்கை அரசாங்கம் முயற்சித்தது.

ஆனால் அதே யுத்தத்தை நடத்திய ராஜபக்ச குடும்பத்தினின் இன்றைய ஆட்சி அதிகாரத்தின்கீழ் குழந்தைகளுக்கான பாடசாலைப் புத்தகங்கள் இல்லை, அப்பியாசக் கொப்பிகள் இல்லை, பாடசாலை உபகரணங்கள் இல்லை என்ற நிலைக்கு முழு நாட்டையும் தள்ளியிருக்கிறது.

அப்பொழுது யுத்தத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக மனிதாபிமான முத்திரை குத்தினார்கள். இப்பொழுது ஒட்டுமொத்த நாட்டின் பாடசாலைச் சிறார்களும் தமது கல்விக்கற்கும் உரிமையை இழந்து தவிக்கின்றனர்.

இதுதான் இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமான வெளிப்பாடா? அல்லது நிர்வாகத் திறமையா? நாட்டின் இத்தகைய நிலைக்கு இன்றைய ஆட்சியாளர்கள் எத்தகைய விளக்கத்தைக் கொடுக்கப்போகின்றனர்?

யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு - கிழக்கில் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடையை அன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள் ஏற்படுயிருந்தனர். தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை ஆயுதப்படைகளின் துணையுடன் அடக்கியொடுக்கினார்கள்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக பாரிய யுத்தத்தைக் கொண்டு நடாத்தினார்கள். இதனால் ஒட்டுமொத்த நாடும் அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருட்கள், உயிர்காக்கும் மருந்துகள் இன்றி தவிக்கின்றது. இலங்கையின் நிலைமையை அவதானித்து வரும் ஐ.நா. இலங்கை பாரிய மனிதாபிமான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அடுத்த வாரத்திலிருந்து வெள்ளிக்கிழமையும் அரசாங்க ஊழியர்களுக்கு விடுமுறை நாளாகக் கணிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

அத்துடன் ஏற்கனவே அரச உத்தியோகத்தர்கள் விரும்பின், ஐந்து வருடம் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் சென்று உழைத்துக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நடந்த காலத்தில் ஏறத்தாழ பதினைந்து இலட்சம் தமிழ் மக்கள் வெளிநாடுகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர். இவர்களில் பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகளும் துறைசார் வல்லுனர்களும் அடங்குவர்.

அதேபோன்று தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கை நியாயமானது என்று வாதாடிய சிங்கள ஜனநாயக முற்போக்குவாதிகளும் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இப்பொழுது முழுநாட்டையும் கொள்ளையடித்து குட்டிச்சுவராக்கி, நிர்வாகச் சீர்கேடுகளை உருவாக்கி, நாட்டில் எஞ்சியிருக்கின்ற நிர்வாகத் திறமையாளர்களையும் துறைசார் வல்லுனர்களையும் வெளியில் அனுப்ப முயற்சிக்கின்றீர்கள்.

கடந்த சில மாதங்களாக இந்தியா ஏறத்தாழ மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அரிசி, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு அத்தியாவசிய மருந்துப்பொருட்கள், மற்றும் பசளை போன்றவற்றை வழங்கிவருகிறது.

அந்த உதவிகள் அடுத்த சில நாட்களில் முடிவடையும் கட்டத்தை எட்டியுள்ளது. இதன் பின்னரான காலப்பகுதியில் ஏற்படப்போகின்ற தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எத்தகைய திட்டமும் தீட்டப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

அடுத்தடுத்த வாரங்களுக்கு எரிபொருள் கிடைக்குமா? எரிவாயு கிடைக்குமா? மின்சாரம் தடையின்றி கிடைக்குமா? அத்தியாவசிய உணவுப்பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்குமா? உயிர்காக்கும் மருந்துகள் தடையின்றி கிடைக்குமா என்பது நிச்சயமற்ற நிலையில் அச்சமான சூழல்நிலையே நிலவுகின்றது.

அரசாங்கத்தாலும் எதனையும் திட்டமிட முடியவில்லை. அரசாங்கத்தின் மோசமான நிர்வாக சீர்கேடுகளினால் பொதுமக்களாலும் எதனையும் திட்டமிடமுடியவில்லை. இந்த இலட்சணத்தில் நீங்கள் தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் இருப்பதற்கு தகுதியானவர்கள்தானா என்பதை உங்கள் மனச்சாட்சியுடன் நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

நாட்டின் இவ்வளவு சீர்கேடுகளுக்கு மத்தியில் நாட்டின் உண்மையான பிரச்சினைகளை அடையாளம் காணாமல், இன்னும் சிங்கள, தமிழ் கலவரங்களை உருவாக்கி, மக்களை திசைதிருப்பி, அவர்களை ஒருவருக்கொருவர் மோதவிட்டு இனவாதத்தில் குளிர்காயத்தான் முயற்சி செய்கின்றீர்கள்.

ஒரு சிங்கள மகன்கூட இல்லாத குருந்தூர் மலையில், காலாகாலமாக சைவ மக்கள் சிவ வழிபாட்ட நடாத்தி வரக்கூடிய அந்த மலையில், நீதி மன்றத் தடைகளையும் துச்சமென மதித்து, பாரிய பௌத்த தாதுகோபுரத்தை எழுப்பியதன் நோக்கமென்ன? இது ஒரு தொல்பொருள் அமைவிடமாக இருந்தால் அதுஒரு தொல்பொருள் இடமாகப் பராமரிக்கப்பட வேண்டுமே தவிர, அதனை ஒரு பௌத்த இடமாக மாற்றுகின்ற உங்களது மேலாதிக்க சிந்தனை என்பது நாட்டை மேலும்மேலும் சீரழிக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

பௌத்த மக்களே இல்லாத பிரதேசங்களில் இராணுவத்தைக் கொண்டு நீதிமன்ற உத்தரவுகளைப் புறந்தள்ளி பௌத்த சின்னங்களை உருவாக்குவதும் பின்னர் அதனைப் பாதுகாப்பதற்காக இராணுவத்தை நிலைநிறுத்துவதும், அந்த இடங்களைச் சுற்றியுள்ள நிலங்களை ஆக்கிரமிப்பதும் தொடர்ச்சியாக சிங்கள தமிழ் இனமுறுகலைப் பேணுவதையே அரசாங்கம் விரும்புவதைக் காட்டி நிற்கிறது.

ஒருபுறம் அரச ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் அவர்களை வெளிநாடுகளுக்குச் செல்லும்படி கேட்கிறீர்கள். மறுபுறம் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி மக்களைப் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளுகின்றீர்கள்.

அதேசமயம் வடக்கு - கிழக்கில் பௌத்த விகாரைகளையும் சிங்கள குடியேற்றங்களையும் மேற்கொள்வதற்கு மிகவும் ஆக்கிரோஷமாக வேலைசெய்கிறீர்கள். இதற்கான பணத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றீர்கள்? அரசாங்கம் இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் தனது இனவாத சிந்தனையிலிருந்து விடுபடுவதற்குத் தயாரில்லை என்பதையே இத்தகைய செயற்பாடுகள் வெளிக்காட்டுகிறது.

கொழும்பில் இருக்கின்ற ஐ.நா தூதுவர்களும் சர்வதேச நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகளும் சர்வதேச ராஜதந்திரிகளும் இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய மோசமான நடவடிக்கைகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை முழுமையாக நிறுத்துவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

முன்னைய மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் 19ஆவது திருத்தத்தினூடாக ஜனாதிபதியின் சில அதிகாரங்கள் பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

பின்னர் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக வந்தவுடன், 20ஆவது திருத்தத்தினூடாக பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டு மீண்டும் பலம்மிக்க ஒரு ஜனாதிபதியாக தன்னை நிலைநிறுத்திக்கொண்டார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு நிரந்தர நாசமாக்கிய இரண்டரை வருடங்களின் பின், இப்பொழுது மீண்டும் பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்குவதற்கான 21ஆவது திருத்தம் பற்றி பேசுகிறார்கள்.

இவற்றையெல்லாம் தாம் விரும்பியவாறு விரும்பியவுடன் அரசாங்கத்தாலும் எதிர்க்கட்சியாலும் செய்ய முடியுமாக இருந்தால், ஒரு முறையான அதிகாரப்பகிர்வினூடாக, எழுபதாண்டுகால இனமோதலுக்கான நிரந்தரத்தீர்வை ஏன் காண முடியாது? சர்வதேச ராஜதந்திரிகளும், ஐ.நா.வின் பிரதிநிதிகளும், சர்வதேச நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகளும் இலங்கையின் பொருளாதாரத்தைத் துக்கிநிறுத்த வேண்டுமாக இருந்தால், இதனையும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று கோருகின்றோம்.

இப்பொழுது நாட்டில் நிலவுகின்ற நெருக்கடியைத் தீர்த்து, அந்நிய முதலீடுகளை உள்வாங்கி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு கண்டறியப்பட வேண்டியது முதற்படியாகும்.- என்றுள்ளார்.

## இராணுவத்தின் துணையுடன் இன மோதலை உருவாக்கும்..

மேலும் அடுத்த முறை எனக்கும் சொல்லுங்கள். நானும் வர முயல்கிறேன். முழு நாடும் உணவு, எரிபொருள், மருந்து நெருக்கடியில் சிக்கி சீரழியும் போது, இன்று இது பற்றிய நீதிமன்ற தடையும் இருக்கும் போது, இந்தியா - பங்களாதேஷ் - ஐரோப்பிய நாடுகளிடம் கெஞ்சி கூத்தாடி நாட்டை ஓட்டும்போது, சீருடை மற்றும் சிவிலுடை இராணுவ சிப்பாய்களின் துணையுடன் காவியுடை பௌத்த தேரர்கள் இங்கே வந்து அடாத்தாக மத-இனமோதலை உருவாக்குகிறார்கள்.

இது இவர்களுக்கு தேவையா? இவர்களை வைத்துக் கொண்டு ஒருபோதும் இந்நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை கொண்டு வர முடியாது. அதனால்தான் நான் அரசியலில் இருந்து மதத்தை ஒதுக்க போராடுகிறேன்.

குறிப்பாக இந்த காவியுடை பயங்கரவாதிகளை ஒதுக்க கோருகிறேன். ஆயிரம் காலிமுக திடல் போராட்டங்கள், அந்த அரகல, (அதையும் இப்போ காணோம்..!) போராட்டங்கள், நடந்தாலும், தேரர்கள் செல்வாக்கு செலுத்தும் அரசமைப்பினால், நாட்டில் மாற்றம் கஷ்டமே.

முல்லைத்தீவு குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் கோவில் எனக்கு தெரியும். 2018ம் தேரர் ஒருவர் இங்கே விகாரையமைக்க முயன்ற போது நான் அதில் தலையிட்டேன். பின் கடைசி கொஞ்ச காலம், இந்து துறை அமைச்சராக இருந்த போதும் இது என் கவனத்துக்கு வந்தது எனவும் தெரிவித்தார்.

## ராஜபக்சக்களின் அரசியலுக்கு

மே 09ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விலகினார் என்றும், ஜூன் 09ஆம் திகதி தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பஸில் ராஜபக்ச விலகினார் என்றும், எனவே ஜூலை 09ஆம் திகதி ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ச விலகக்கூடும் என்றும், ராஜபக்சக்களின் அரசியல் முடிவுக்கு வருகின்றது என்றும் சமூக ஊடகங்களில் சில பதிவுகளைப் பார்த்தேன். சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்கள் கூட இந்தப் பதிவுகளை இட்டுள்ளனர்.

இவ்வாறு பதிவுகளை இடுவோர் ஒன்றை மாத்திரம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

அதாவது, ராஜபக்சக்கள் தத்தமது சுயவிருப்பத்தின் பிரகாரம் பதவிகளிலிருந்து விலகலாம். ஆனால், அவர்களின் அரசியலுக்கு ஒருபோதும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது. ராஜபக்சக்களின் அரசியல் பயணம் தொடரும். அந்தப் பயணத்தை எவரும் தடுத்துநிறுத்த முடியாது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராக தற்போதும் மஹிந்த ராஜபக்சவே பதவி வகிக்கின்றார். எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தயாராகவுள்ளது. நாடாளுமன்றில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிதான் பெரும்பான்மைப் பலத்துடன் உள்ளது - என்றார்.

## பிரதமர் ரணிலின் தவறான புரிதல் எனது உயிருக்கு ஆபத்து

விக்ரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்டிருந்தார்.

20ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் உட்பட நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தமை காரணமாகவே பலரின் வீடுகள் எரியூட்டப்பட்டதாக சாணக்கியன் வெளியிட்ட கருத்து ஏற்புடையதல்ல.

இந்த கருத்தின் மூலம் சாணக்கியன் நடந்த வன்முறைகளை ஏற்றுக்கொள்கிறாரா? மரணத்தை ஏற்றுக்கொள்கிறாரா? எனவும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில் இதுகுறித்து தெளிவுபடுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், 'கடந்த மே மாதம் 20ஆம் திகதி, எனது சமீபத்திய நாடாளுமன்ற உரை குறித்த ஓர் தெளிவுபடுத்தலின் கட்டாயம் எனக்குள்ளது.

அதனடிப்படையில் நான் வன்முறையைத் தூண்டக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளிலும் நான் ஒருபோதும் ஈடுபடவும் இல்லை ஆதரிக்கவுமில்லை, ஊக்குவிக்கவும் இல்லை என்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

3 தசாப்தங்களுக்கு மேல் பல விதமான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ள ஓர் சமூகத்தை நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற போதிலும், சமாதானம், நல்லிணக்கம் மற்றும் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கியதாக அனைத்து இலங்கையர்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக நான் குரல் கொடுத்து வருகிறேன். நாம் பல சமூக பிளவுபடுவதை விட ஒன்றாக இருப்பதில் இலங்கையர்களின் பன்முகத்தன்மையே எங்களின் பலமாக இருக்க வேண்டும் என்பதில் எனது கருத்துக்களில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

மே 9ஆம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் குறைகள், தேவைகள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக உணர்ந்ததால்தான், மக்கள் வன்முறையான முறையில் எதிர்வினையாற்றினார்கள் என்று உரைத்திருந்தேன்.

தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக்கு வாக்களித்த மக்களின் நலனைப் பாதுகாப்பதில் தங்கள் கட்டாயக் கடமைகளில் இருந்து தவறிவிட்டதாக அவர்கள் ஒருவேளை உணர்ந்திருக்கலாம். என்னுடைய இந்தக் கூற்று தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இதன் காரணமாகவே அவர்களுக்கு எனது நிலைப்பாட்டை விளக்குவது எனது தார்மீகக் கடமை என்று உணர்கின்றேன். அதனடிப்படையில், எனது அறிக்கைகளின் உண்மைத் தன்மையை மாண்புமிகு பிரதமர் சரிபார்த்து, இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியும், இது போன்ற ஒரு மிகத் தீவிரமான அறிக்கை, அது நாட்டின் பிரதமரிடமிருந்தும், குறிப்பாக உங்களைப் போன்ற அந்தஸ்துள்ள ஒருவரிடமிருந்தும் வெளிப்படும்போது, பொது மக்கள் அதை சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மை என்று கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ள முடியும். இது எனது நற்பெயருக்கு ஈடுசெய்ய முடியாத சேதத்தை ஏற்படுத்தும் அதே வேளையில் எனது உயிருக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இந்த நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் முன்னுரிமையும் காலத்தின் தேவையும், இந்த நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதும், அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதும், மூன்று வேளை உணவையும் உறுதிப்படுத்துவதும், அவர்களை இந்த துயரத்திலிருந்து விடுவிப்பதும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நாட்டு மக்களுக்கு ஆறுதல் அளிக்கும், அவர்களுக்கு உடனடி மற்றும் நிலையான நிவாரணம் அளிக்கும், அவர்களின் தற்போதைய குறைகள் மற்றும் எதிர்கால நல்வாழ்வுக்கான எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் நான் என்றும் ஆதரிப்பேன். எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன

பகிர்ந்து கொண்டுள்ளது. இந்த வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் திறந்த மனப்பான்மையிலேயே, தற்போதைய சபை அமர்வில் நான் இந்த உரையை ஆற்றுகிறேன்.

அண்மைய வாரங்களில் இலங்கை எதிர்கொள்ளும் பாரதூரமான சமூக மற்றும் பொருளாதார நிலைமையை சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது. தொற்றுநோய் உள்ளிட்ட உலகளாவிய நெருக்கடிகளால் இந்த நிலைமை மோசமாகிவிட்டாலும், போராட்டக்காரர்களின் கவனம் பொருளாதார நிவாரணம் மற்றும் நிறுவன சீர்திருத்தத்திற்கான கோரிக்கைகளை உள்ளடக்கியது.

இந்தச் சவால்களை அங்கீகரித்து, அனைவரையும் உள்ளடக்கிய முறையில் முன்னோக்கிச் செல்வதில், நமது மக்களின் அனைத்துப் பிரிவுகளின், குறிப்பாக, இளைஞர்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்ப்பது மிகவும் முக்கியமானதாக நாங்கள் கருதுகிறோம்.

எதிர்காலத்திற்கான நிலையான அடித்தளமாக, பரந்த அடிப்படையிலான அரசாங்கத்தின் ஊடாக தேசிய பிரச்சினைகளுக்கு ஒருமித்த அணுகுமுறையை ஜனாதிபதியும் பிரதமரும் கோரியுள்ளனர். புதிய பிரதமரின் நியமனம் மற்றும் பல கட்சிகளை உள்ளடக்கிய புதிய அமைச்சரவையின் நியமனம் ஆகியவற்றுடன் அரசியல் மாற்றங்கள் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றன.

அரசியலமைப்பின் 21வது திருத்தத்தின் தேவை, பாராளுமன்றம், சுயாதீன நிறுவனங்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களின் மீதான சரிபார்ப்பு மற்றும் சமநிலை ஆகியவற்றில் உள்ள அடிப்படை ஜனநாயக விழுமியங்களை ஒருங்கிணைப்பதற்காக, அனைத்து கட்சிகளின் ஒருமித்த கருத்தை உருவாக்குவதில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். இந்த சீர்திருத்தங்கள் ஜனநாயக அரசியலமைப்புக் கட்டமைப்பிற்குள் மற்றும் உரிய நடைமுறைக்கு ஏற்ப நடைபெறுவதை நாம் கூட்டாக உறுதி செய்ய வேண்டும். மாற்றத்தின் செயன்முறையானது, வலுப்படுத்த விரும்பப்படும் ஜனநாயக அமைப்புக்களை அழிக்கக்கூடாது.

கருத்து வேறுபாடுகள் அமைதியானதாகவும், ஜனநாயக வெளிக்குள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். அண்மைய இடையூறுகளின் போது, சட்டம் மற்றும் பொது ஒழுங்கைப் பேணுதல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை தடையின்றி விநியோகிக்க அனுமதிக்கும் ஒரே நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மற்றும் அவசரகால விதிமுறைகள் விதிக்கப்பட்டன.

மே 9ஆந் திகதி நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் அதன் பின்விளைவுகள் தொடர்பாக முழு அளவிலான விசாரணைகள், சட்டமா அதிபரின் முன்மாதிரி மற்றும் நேரடியான நீதித்துறை மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றன. நடாளாவிய ரீதியில், பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பலரின் மரணம் மற்றும் பெருமளவிலான சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமையையும் நாங்கள் தடையின்றி கண்டிக்கின்றோம்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இந்த சம்பவங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொருளாதாரத்தின் முக்கிய அம்சத்தில், நிலைமையை உறுதிப்படுத்தவும், மக்களுக்கு அத்தியாவசியமானவற்றை வழங்கவும், சர்வதேச நாணய நிதிய ஆதரவுத் திட்டத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படும் உறுதியான நடவடிக்கைகளை நாங்கள் உருவாக்குகின்றோம்.

முன்னோக்கிச் செல்வதில், உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்காளிகள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் நாங்கள் உரையாடுகின்றோம். நமது பொருளாதாரத்தை மீண்டும் நிலையான அபிவிருத்திப் பாதையில் வைப்பதற்கும், உணவு, உரம், எரிசக்தி மற்றும் மருந்துகள் போன்ற தேவைகளை வழங்குவதற்கும் ஒரு ஒத்திசைவான கட்டமைப்பை நாங்கள் ஒன்றிணைத்து வருகின்றோம். தற்போதைய சூழ்நிலை மற்றும் எதிர்கால சீர்திருத்த நடவடிக்கைகள் ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

எனவே, இந்த விளைவுகளைத் தணிப்பதற்கான இலக்கு சார்ந்த சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நாங்கள் உறுதியாக உள்ளோம். மனித உரிமைகள் பிரிக்க முடியாதவை, ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவை மற்றும் ஒன்றுக்கொன்று சார்ந்தவை என்பதை ஒரு முக்கிய நம்பிக்கையாக நாங்கள் அங்கீகரிக்கின்றோம். இந்த ஆண்டு மார்ச் மாதம் 49வது அமர்வு உட்பட, இலங்கை தொடர்பாக எழுப்பப்பட்ட தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கடந்த ஆண்டுகளில் நாங்கள் சபையுடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

இன்று, நாம் ஒரு பரந்த சமூக சூழலில் குறைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்க்க முற்படுகையில், உள்நாட்டு செயன்முறைகள் மூலம் மோதலுக்குப் பிந்தைய ஒருங்கிணைப்பில் மேலும் உறுதியான முன்னேற்றத்தை நிரூபிப்பதில் கட்டாயமானதும், சவாலானதுமாகும். இந்த சபையுடன் செயலில் ஈடுபடுவதன் மூலம் அதைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம்.

சமீபத்திய சவால்கள் மற்றும் தடைகள் இருந்தபோதிலும், சில முக்கிய துறைகளில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை நான் முன்னிலைப்படுத்த விரும்புகின்றேன்.

கடந்த கூட்டத்தின் பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்படும் என மனித உரிமை பேரவையில் நான் உறுதியளித்த பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து, அது நிறைவேற்றப்பட்டது.

இந்தத் திருத்தங்களின் ஒட்டுமொத்த விளைவு, தற்போதுள்ள சட்டத்தில் கணிசமான முன்னேற்றத்தையும், ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதோடு, இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரங்களுக்கான காரணத்தை மேலும் அதிகரிக்கும்.

இந்த நிலையில், பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு நடைமுறையில் தடை விதிக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை மேற்கொள்வதில் உரிய நடைமுறையைப் பின்பற்றுமாறும், மிகவும் அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துமாறும் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த சபையின் கடைசி அமர்வுக்குப் பின்னர், 2022 மார்ச் முதல் ஜூன் வரை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 13வது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2012ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறை இல. 1 இன் கீழ் நியமிக்கப்பட்ட தனிநபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியல் மீளாய்வு செய்யப்படுகின்றது. தற்போது, 318 தனிநபர்கள் மற்றும் 04 நிறுவனங்களை பட்டியலில் இருந்து நீக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இது ஒரு தொடர் பயிற்சியாகும்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் அதன் ஆணையைத் தொடர்ந்தது.

நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக, நிலையான அபிவிருத்தி இலக்கு 16 உட்பட இலங்கை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஐ.நா. வின் நிலையான அபிவிருத்தி அறிக்கை 2021 இலங்கையை 8%வது இடத்தில் வைத்துள்ளதுடன், (இலங்கையின் உலகளாவிய தரவரிசை 165 நாடுகளில் % இடங்களால் அதிகரித்துள்ளது) நாட்டிற்கான ஒட்டுமொத்த தரவரிசை 68.1 ஆக வழங்கப்பட்டுள்ளது, இது பிராந்திய சராசரியை விட அதிகமாகும்.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், அதன் சரிபார்ப்பு செயன்முறையின் ஒரு பகுதியாக, விசாரணைக் குழுவிற்கு அழைக்கப்பட்ட 837 க்கும் அதிகமான நபர்களை சந்தித்துள்ளது. இழப்பீடுகளுக்கான அலுவலகம், தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், ஆண்டுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்காக, அதன் ஆரம்ப ஒதுக்கீடான ரூபா. %59 மில்லியனுக்கும் மேலதிகமாக, ரூபா. 53 மில்லியனைஒதுக்கியுள்ளது.

மோதலின் முடிவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட 92% க்கும் அதிகமான தனியார் நிலங்கள் முறையான உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8,090 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பாக, சட்டமா அதிபர் உயர் நீதிமன்றங்களுக்கு பல குற்றப்பத்திரிகைகளை அனுப்பியுள்ளதோடு, அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

புலம்பெயர் சமூகத்துடனும், எமது நாட்டின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சிவில் சமூக அமைப்புக்களுடனும் ஈடுபடுவதற்கு இலங்கை திறந்த நிலையில் உள்ளது. மனித உரிமைகள் ஆணையத்தின் 46/1 தீர்மானத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறையை இலங்கை நிராகரிப்பதனை கடந்த காலத்தில் நான் தெளிவுபடுத்தினேன். இந்த பொறிமுறையானது துருவப்படுத்துவதற்கும் பிளவுபடுத்துவதற்கும் மட்டுமே உதவும் அதேவேளை, இந்த சபை மற்றும் அதன் உறுப்பினர்களின் வளங்களில் பயனற்ற மற்றும் உதவியற்ற வீண் நிலையை ஏற்படுத்தும் என்ற எமது நம்பிக்கையை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

# முஸ்லீம்கள் முன்னேற கூடாது என இராணுவத்தை வட, கிழக்கில் குவித்துள்ளனர்

(பாறுக் ஷிஹான்)

தமிழர்கள் போன்றே முஸ்லீம்கள் முன்னேற கூடாது என இராணுவத்தை வட கிழக்கில் குவித்துள்ளனர்.இலங்கை இராணுவத்தின் கட்டமைப்பில் 20 டிவிசன்கள் இருக்குமாயின் அதில் 16 டிவிசன்கள் வடக்கு கிழக்கில் இருக்கின்றது.தற்போதைய சூழ்நிலையிலும் கூட ஜனாதிபதி கோட்டபாய இராணுவத்தினருக்கான எந்தவொரு வளமும் குறைக்கப்பட மாட்டாது என கூறி இருக்கின்றார்.இது இனவாதத்தின் ஒரு விளைவாகும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு காந்திஜீ விளையாட்டு கழகத்தின் 25 ஆவது ஆண்டினை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது

எனக்கு 20 வருட அரசியல் அனுபவம் உண்டு.இந்த நாட்டில் பொருளாதார வீழ்ச்சியை அரசாங்கம் அனுபவித்து கொண்டிருக்கின்றது.இந்த அரசகட்டமைப்பிற்குள் உள்ள





மக்கள் எவ்வாறு சிரமங்களை எதிர்கொள்வார்கள் என்பதை நாம் அவதானிக்கலாம். கடந்த 30 வருடங்களாக இலங்கை அரசாங்கம் தமிழர்களின் பொருளாதாரத்தை திட்டமிட்டு போரால் அழித்தது.பின்னர் போர் நிறைவுற்ற 13 வருடங்களின் பின்னரும் தமிழருக்கு இந்த நிலை தொடர்ந்தது.

74 வருடங்களாக பல்வேறு கட்டமைப்புடன் தமிழர்களை அழித்த அரசாங்கம் வங்குரோத்து நிலைமைக்கு சென்றிருக்கின்றது.இந்த நாட்டில் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பிற்கு 19 வீதம் ஒதுக்கப்படுகின்றது.அதில் ஒரு வருடத்திற்கு இராணுவத்தினரின் தேவைக்கு வரவு செலவு திட்டத்தில் 13 வீதம் ஒதுக்கப்படுகின்றது. கல்வி மற்றும் சுகாதார பிரிவிற்கு பாதுகாப்பு செலவிற்கு என ஒதுக்கப்படுகின்ற வீதத்தில் அரைவாசியே ஒதுக்கப்படுகின்றது.இந்த நாட்டின் சொத்து மனிதர்கள் எனின் அவர்களுக்கு கல்வியும் சுகாதாரமும் அவசியம்.

இலங்கை அரசாங்கம் தமிழர்களை அழிப்பதற்காகவே பாதுகாப்பிற்கு இவ்வாறு முக்கியத்துவம் கொடுக்கின்றது.தமிழர்கள் போன்றே முஸ்லீம்கள் முன்னேற கூடாது என இராணுவத்தை வட கிழக்கில் குவித்துள்ளனர்.இலங்கை இராணுவத்தின் கட்டமைப்பில் 20 டிவிசன்கள் இருக்குமாயின் அதில் 16 டிவிசன்கள் வடக்கு கிழக்கில் இருக்கின்றது.தற்போதைய சூழ்நிலையிலும் கூட ஜனாதிபதி கோட்டபாய இராணுவத்தினருக்கான எந்தவொரு வளமும் குறைக்கப்பட மாட்டாது என கூறி இருக்கின்றார். இது இனவாதத்தின் ஒரு விளைவாகும். எமது உரிமையில் எந்தவொரு விட்டுக்கொடுப்பும் இன்றி நாம் மிக இறுக்கமாக இருக்க வேண்டும்.அதே போன்று ஏனையவர்களது உரிமைகள் அந்தஸ்துக்களையும் நாம் வழங்குவதற்கு தயங்க கூடாது என கேட்டுக் கொண்டார்.மேலும் காந்திஜீ விளையாட்டு கழகத்தின் 25 ஆவது ஆண்டினை முன்னிட்டு கழகத்தினருக்கான புதிய ரீ சேட் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் த.தே.மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இணைப்பாளர் புஷ்பராஜ் துஷானந்தன், தமிழ் தேசிய பேரவை உறுப்பினர்கள், விளையாட்டு கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## 'போதை பொருட்கள் ஒழிக்கப்பட வேண்டும்' எருக்கலம்பிட்டியில் கவனயீர்ப்பு போராட்டம்






(வாஸ் கூஞ்ஞ)

தங்கள் கிராமம் , மாவட்டம் மற்றும் இந்த நாட்டில் போதை பொருட்களுக்கு சாவு மணி அடிக்கப்பட வேண்டும் என மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இவ் கவனயீர்ப்பு போராட்டமானது ரஹாமா அமைப்பு ஒலன்டியர்ஸ் போர் லைப் அமைப்பினர்களின் அனுசரனையுடன் எருக்கலம்பிட்டி ஜம்மியதுல் உலமாவினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இவ் கவனயீப்பு போராட்டமானது எருக்கலம்பிட்டி பொலிஸ் நிலையத்தக்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (12.06.2022) காலை 8 மணி தொடக்கம் காலை 10 மணி வரை இடம்பெற்றது.

இவ் போராட்டத்தில் இவ் கிராம மக்கள் மௌலவிமார் பாடசாலை சமூகம் நலன் விரும்பிகள் பொது அமைப்புக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டதுடன் போதைப்பொருளுக்கு எதிரான 'போதைக்கு சாவு மணி அடிப்போம்' போதை பொருட்களை ஒழித்து மனித மாண்பை மதிப்போம்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு இருந்தனர்.

## திருமலையில் பொலிசாரினால் கடற்கரையில் சிரமதான பணி முன்னெடுப்பு





(ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை கரையோரப் பிரதேசங்களை அண்டிய கடற்கரைகளில் பொலிசாரின் தலைமையில் சிரமதான பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட ரேஞ்ச் டி.ஐ.ஜி லயனல் குணதிலக அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன பிரகத் மனகே அவர்களின் தலைமையில் திருகோணமலை பிரதான கடற்கரையில் ஆரம்பிக்கப்பட்டது.

திருகோணமலை கடற்கரை பிரதேசத்தில் கரையோரங்கள் மற்றும் கடலில் வீசப்படும் கழிவு பொருட்கள் கடற் கரையில் ஒதுங்கி கடல்வளம் பெரிதும் பாதிக்கப்படுகின்றமையினால் குறித்த சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டதுடன் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணியில் சேகரிக்கப்பட்ட குப்பைகள் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் கண்ணாடி பொருட்கள் மண்ணில் மக்கக்கூடிய பொருட்கள் என பிரித்து சேகரிக்கப்பட்டதுடன் குறித்த சிரமதானப் பணியில் திருகோணமலை தலைமையகம் மற்றும் துறைமுக பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் 65 க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டதுடன் திருகோணமலை மாவட்ட கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகளும் கலந்து சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சிரமதான பணி திருகோணமலை நகரை அண்டியுள்ள பிரதான கடற்கரை, துறைமுக வீதியை அண்டிய கடற்கரை, ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக உள்ள கடற்கரை மற்றும் மட்டுகழி பிரதேசத்தை அண்டிய கடற்கரைப் பிரதேசங்கள் என்பன இவ்வாறு சுத்தம் செய்யப்பட்டது..

குறித்த சிரமதானப் பணியில் திருகோணமலை - 01 உதவி பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் விதானகே, திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயரத்ன, திருகோணமலை மாவட்ட கரையோர பாதுகாப்பு திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.சமீஸ் சனீஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஊர்மிலா,கிராம உத்தியோகத்தர், திருகோணமலை நகர சபை ஊழியர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து குறித்த சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஊடக டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு









(பாறுக் ஷிஹான்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த 2017/18 ஆம் ஆண்டிற்கான இதழியல் டிப்ளோமா (Diploma in Journalism) பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(12) காலை 09.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியர் கலாநிதி ஏ. சண்முகதாஸ் நூணிணிட் தொழிநுட்பத்தின் ஊடாக கலந்து கொண்டு பிரதான உரை நிகழ்த்தினார். கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பயிற்சிநெறியானது, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்று காரணமாக சில வருடங்கள் காலதாமதமானதுடன், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடந்த வருடம் இதற்கான இறுதிப் பரீட்சை இடம்பெற்றிருந்தது. இதில் 41 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், இரு மாணவர்கள் இதில் அதி விஷேட (Distinction) சித்திகளைப் பெற்றிருந்தனர்.

இதேவேளை இந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில்,பல்கலைக்கழகத்தின் மொழித்துறைத் தலைவரும், இப்பயிற்சி நெறியின் இணைப்பாளருமான பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் தலைமைப் பேராசிரியரும், வெளிவாரி கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் எம்.எச் தௌபீக் பல்கலைக்கழ பதிவாளர் உள்ளிட்ட இப்பயிற்சி நெறியின் அனைத்து வளவாளர்களும் கலந்து கொண்டனர்.

## கலாம் உலக சாதனை படைத்த ஒன்றரை வயதான மழலை

(எஸ்.சபேசன்)

இந்தியாவில் இயங்கும் கலாம் உலக சாதனை அமைப்பினால் இணைய வழிமூலம் கடந்த மூன்று மாதங்களுக்கு மூன்பு நடாத்தப்பட்ட மழலைச்செல்வங்களுக்கான போட்டி நிகழ்வில் பெரியநீலாவணையைச் சேர்ந்த கேஷாந்தன் சபேஜிதா தம்பதிகளின் புதல்வி லிகேஷா ஒன்றரைவயதான இவர் 251 வார்த்தைகள் 14 விலங்குகளின் ஒலிகள் போன்றவற்றை குறிப்பிட்ட நேரத்திற்குள் வேகமாக சொல்லி கலாம் உலக சாதனையை வென்று சாதனை படைத்து பெருமை செய்துள்ளார் .

இவர் 11-செயல்கள் 19-விலங்குகள் 13-பறவைகள் 16 உடல் பாகங்கள் 4-நிறங்கள் 5-பூக்கள் 31-உணவுகள் 12 - பழங்கள் 9 - கடவுள் பெயர்இ 12-பூச்சிகள் 8-தலைவர்களின் பெயர்கள் 14 விலங்குகள் மற்றும் பறவைகளின் ஒலிகள் 83-பொதுவான பொருட்கள் 3-கொடிகள் 8-காய்கறிகள் 11-வாகனங்கள் மற்றும் 6-வாகனங்களின் விளக்கம் மற்றும் 3 பொது அறிவு கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார்.



எமது நாட்டிற்கும் எமது மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார் இந்த சாதனைக்காக அயராது பாடுபட்ட இவரது பெற்றோர்களது விடா முயற்சியே இவ் சாதனைக்கு வழிவகுத்து இருக்கின்றது. அதே வேளை பாவாணர் அக்கரைப்பாக்கியன் நவமணிதம்பதியினரினதும் சுந்தரமூர்த்தி இராஜேஸ்வரி தம்பதியினரும் பேரப்பிள்ளை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# திருமலை சண்முகா இந்துக் கல்லூரி அதிபருக்கு நீதிமன்றத்திடமிருந்து அழைப்பாணை

(ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரியில் ஹபாயா அணிந்து சென்றமைக்காக வெளியேற்றப்பட்ட ஆசிரியை பஹ்மிதா ரமீஸ் அவர்கள் பாடசாலையின் அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் அதிபர் லிங்கேஸ்வரி அவர்களுக்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் எழுத்து மூலக் கட்டளைக்கிணங்க சென்ற பெப்ரவரி மாதம் 2ம் திகதி திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு கடமையேற்பதற்காக சென்றிருந்த பஹ்மிதா றமீஸ் அவர்கள் கடமையேற்க விடாது பல குழப்பங்களை ஏற்படுத்தி, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தனது சட்டரீதியான கடமையை செய்யத் தடுத்தமை என்ற குற்றச்சாட்டின் பெயரின் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றில் சென்ற மார்ச் மாதம் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.



குறிப்பிட்ட வழக்கில் ஆசிரியை பஹ்மிதாவுக்கு ஆதரவாக குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகளான் றதீப் அஹமட், ஹஸன் றுஷ்தி, முஹைமின் காலித் மற்று ஸாதிர் அஹமட் ஆகியோர் ஆஜராகி சமர்ப்பணம் செய்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் இம்மாதம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டத்தரணிகளான முபஸ்லீன் மற்றும் றிஸ்வான் ஆகியோர் வாதி தரப்பில் ஆஜராகி இருந்தனர். ஏலவே மன்றின் நீதிபதியவர்கள் குரல்கள் இயக்க சட்டத்தரணிகள் செய்ய சமர்ப்பணத்தை ஏற்று பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப நீதிபதி கட்டளை பிறப்பித்துள்ளார். இவ்வழக்கானது எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருகின்ற நிலையில்.

குறிப்பிட்ட இவ்வழக்கில் அதிபர் லிங்கேஸ்வரி அவர்களை நீதிமன்று குற்றவாளியாகக் காணுமிடத்து இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவை பிரிவுகள் 162,183,184,486 அடிப்படையில் சிறைத்தண்டனை கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளதாக குறித்த வழக்கு தொடர்பில் ஆஜரான சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளதுடன்.

சண்முஹா ஹபாயா விவகாரத்தில் ஆரம்பம் தொட்டு குரல்கள் இயக்கம் பாதிக்கப்பட்ட ஆசிரியை பஹ்மிதா றமீஸுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வற்றாப்பளையில் 3 தினங்கள் தரித்திருந்த யாழ்- கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் இன்று மீண்டும் ஆரம்பம்



( காரைதீவு நிருபர் சகா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த யாழ்-கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் கடந்த மூன்று தினங்கள் வற்றாப்பளையில் தங்கியிருந்தனர்.

கடந்த 04 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்த இப் பாதயாத்திரை 09 ஆவது நாள் இன்று (14) , செவ்வாய்க்கிழமை ஊறங்கரை பிள்ளையார் ஆலயத்தை அடைந்து, தங்கும்.

கடந்த மூன்று நாட்களாக வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில், வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு வரை தங்கியிருந்தனர்.

இன்று,14ஆம் திகதி மீண்டும் பாதயாத்திரை ஊறங்கரை நோக்கி நகரும் என பாதயாத்திரை பொறுப்பாளர்களான எஸ்.ஜெயராஜா எஸ்.நந்தபாலா ஆகியோர் முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் இருந்து தெரிவித்தனர்.

"என்னதான் பொருளாதார நெருக்கடி இருந்தாலும் வழிநெடுகிலும் முருகன் அருளால் ஆலயங்களும் மக்களும் தாராளமாக உணவளித்து உதவி செய்தனர் . எவ்வித விக்கினமும் இல்லாமல் சந்தோஷமாக பாதயாத்திரையில் வருகிறோம்." என இவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# 'அனுபவம் பேசியதே'

## கலந்து சிறப்பிக்கிறார் மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாருக்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில், புதிதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மனம் திறந்து தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் 'அனுபவம் பேசியதே' என்ற சிறப்பு நிகழ்ச்சி கொழும்பு, மருதானை வை.எம்.எம்.ஏ மண்டபத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர்களுடனான சிநேகபூர்வ சந்திப்பும் கலந்துரையாடலுமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்ச்சியில், சிரேஷ்ட ஊடகவியலாளரின் சுவாரஷ்யமான அனுபவங்களைக் கேட்டுப் பயனடைவதோடு, கேள்வி - பதில் நிகழ்விலும் கலந்து கொள்ளலாம்.

மாதமொரு முறை நடாத்தத் திட்டமிட்டுள்ள இந்நிகழ்ச்சியின், முதலாவது விருந்தினராக நாட்டின் மூத்த ஊடகவியலாளர்

லத்தீப் பாருக் தனது தேசிய மற்றும் சர்வதேச ஊடக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பி. இப்திகார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்ச்சியில், விரும்பியவர்கள் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டுக் குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.







# தொடரும் மண்ணெண்ணை தட்டுப்பாடு மீன்களின் விலை உச்சத்தை தொட்டது



(ரவ்பீக் பாயிஸ் )

நாட்டில் மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவி வருகின்றமையினால் கடல் உணவுகளின் விலைகள் பாரிய அளவில் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அதனடிப்படையில இன்று திருகோணமலை மொத்த மீன் சந்தையில் ஒரு கிலோ கிரேம் சூட மீனின் விலை 600 ரூபாவாகவும், ஒரு கிலோ கிரேம் சுறா மீனின் விலை 1600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

மேலும் ஒரு கிலோ கிராம் கணவாயின் விலை 1500 முதல் 1600 ரூபா வரை விற்பனை செய்வதாகவும் இறால் ஒரு கிலோ கிராமின் விலை 1900 முதல் 2,400 ரூபாய்க்கும் சூரன் மீன் ஒரு கிலோ கிராமின் விலை 1200 ரூபாவாகவும் பாரை மீன் ஒரு கிலோ கிராம விலை 1,600 ரூபாவாகவும் மற்றும் ஒரா வகை மீனின் ஒரு கிலோ கிராம் 1300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்

திருகோணமலையில் பெரும்பாலான மக்கள் தமது ஜீவனோபாயமாக மீன்பிடி தொழிலை மேற்கொண்டு வருகின்றனர் இவ்வாறு இருக்கையில் திருகோணமலையில் கடல் உணவிற்கான விலைகள் இவ்வாறு உச்சத்தை தொட்டு இருப்பது வரலாறு காணாத விடயம் எனவும் உரியமுறையில் மண்ணெண்ணெய் விநயோகிக்கப்படாமையினால் இவ்வாறு கடல் உணவுகளின் விலைகள் உயர்வடைந்துள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தை பொருத்தவரையில் திருகோணமலை மக்களின் தமது வாழ்வாதாரமாக கடல் தொழிலை நம்பியே உள்ளனர் எனவும் கடல் தொழில் சீராக இடம்பெற்றால் பணப்புழக்கம் அதிகளவில் இடம்பெறும் எனவும் இதனால் முச்சக்கர வண்டி சாரதிகள் கரையோரத்தை அண்டியுள்ள வர்த்தகர்கள் என அனைவரும் பெரிதும் நன்மை அடைவார்கள் எனவும் உரிய முறையில் மண்ணெண்ணை விநியோகிக்கப்படாமையினால் மீன்பிடிக்க செல்பவர்களின் வீதம் பாரியளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் இதனால் சந்தைக்கு உரியமுறையில் மீன்கள் வருவதில்லை எனவும் பாரிய அளவில் கடல் உணவுகளின் விலைகள் உயர்வடைந்துள்ளமையினால் பொது மக்கள் கொள்வனவிற்காக வருகை தருவது குறைந்துள்ளதாகவும் மோத்த மீன் விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு நிலவுகின்றதே இல்லையே இவ்வாறு மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பாரிய சவாலாக இருக்கும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரிதும் பாதிப்பை வழங்குவதாக புத்திஜீவிகள் விசனம் தெரிவிப்பதுடன் மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் உரியமுறையில் வழங்கி மீன்பிடித் துறையை முன்னெடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் உடன் செய்து தர வேண்டும் எனவும் திருகோணமலை மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றுமல்லாது மக்களின் ஆரோக்கியத்திற்கும் இது பாரிய சவாலாக அமைந்துள்ளது எனவும் அரசாங்கம் இதற்கான பாரிய திட்டத்தை அவசரமாக முன்னெடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றன குறிப்பிடத்தக்கது.

# இன்று காரைதீவில் வைகாசி திருக்குளிர்த்தி



(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்தி பாடும் சடங்கு இன்று.(14) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4மணிக்கு நடைபெறும்.

நேற்று முன்தினம் இறுதி பூஜை இடம்பெற்றது. பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று திங்கட்கிழமை காலை அடியார்கள் அங்கப்பிரதட்சணம் கற்பூச்சட்டி எடுத்தல் போன்ற நேர்கடன் செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கடந்த வெள்ளி சனி, ஞாயிறு தினங்களில் உள்ளூர் ,வெளியூர் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர்.ஆலய கப்புவனார்களான மயில்வாகனம் யோகநாதன், சங்கரப்பிள்ளை நித்தியானந்தன் ஆகியோர் சடங்கை முறையான நடாத்தினர்.

ஆலய தர்மகர்த்தாக்களான சாமிநாதன் கங்காதரன், இராசையா குணசிங்கம் ,பரமலிங்கம் இராசமோகன் ஆகியோரின் வழிநடாத்தலில் வருடாந்த வைகாசிசடங்கு கடந்த திங்கட்கிழமையிலிருந்து சிறப்பாக நடைபெற்றுவருகிறது.



நேற்று(13)திங்கட்கிழமை மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.இன்று(14) செவ்வாய்க்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் சடங்கு நிறைவடையும்.

கடந்த 3வருடங்களாக கொரோனா சஹ்ரான் காரணமாக மட்டப்படுத்தப்பட்டிருந்த இச் சடங்கு இவ்வருடம் பெருந்திரளான பக்தர்கூட்டத்துடன் கோலாகலமாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

### மருந்து தட்டுப்பாடு

# வாள் வெட்டுக்கள் வீதி விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளுங்கள்

## பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.வினோதன்

(வாஸ் கூஞ்ஞ)

இன்றைய நாட்டின் நிலைமையால் வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடுகள் நிலவி வருகின் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக மருத்துவத்துறையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் பல முக்கியமான மருந்து வகைகள் கையிருப்பில் இல்லை.



இதனால் தேவையில்லாமல் வாள்வெட்டு சம்பவங்கள் வீதி விபத்தில் காயமடைதல் குளங்களில் மூழ்குதல் போன்ற அனாவசியமான விடயங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் தேவையில்லாமல் காயமடைந்து வருபவர்களுக்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளும் போது உண்மையான தேவையுடைய நோயாளர்களுக்கு மருத்துவச் சேவை செய்ய முடியாமல் போகின்றது.

அத்துடன் சுப்பர் பெட்ரோல் இல்லாத காரணத்தால் மன்னார் மாவட்டத்தில் 5 ஆம்புலன்சுக்கு மேல் இயங்காமல் நிற்கின்றது.

வீதி விபத்துக்கள் வாள்வெட்டு காயங்கள் போன்ற பலவிதமாக அவசர மருத்துவ சேவைக்கு வருபவர்கள் காத்திருக்க வேண்டியதுடன் உயிரிழப்புகள் ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது.

அண்மைய உயிலங்குளம் சம்பவம் கூட மிகவும் கவலைக்குரிய விடயமே.

எனவே தற்போதைய நாட்டினதும் ஒவ்வொரு குடும்பத்தின் நெருக்கடியான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு களியாட்டங்கள் வாள்வெட்டு சம்பவங்கள் வீதி விபத்துக்கள் போன்ற மனித குலத்திற்கு தேவையில்லாத செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தர்மராஜா வினோதன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

# குடாக்கரையில் நிலையான குடிநீர் திட்டம்



(ஹஸ்பர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட குடாக்கரை பகுதில் தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற நீர் விநியோகம் அனைத்து குடும்பங்களுக்கும் வேகமாக கிடைக்கப்பெறுவதில்லை என்றும் தினந்தோறும் நீர் விநியோகம் விநியோகிக்கப் படுவதில்லை என்றும்.

இந்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத் தருமாறும் பொது மக்களும் அப்பகுதி சங்கங்களும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் உப தவிசாளர் முகமட் நௌபர் அவர்களிடம் எழுத்து மூலமான கோரிக்கையினை முன்வைத்திருந்தனர்.

இதற்கான நிரந்தர தீர்வினை பெற்றுக்கொடுக்கும் ஒரு அங்கமாக குடாக்கரை பிரதேசத்தில் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் மக்கள் பங்களிப்புடன் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் உப தவிசாளர் முகமட் நௌபர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# பேசாலை புனித வெற்றி அன்னை பங்கில் 80 சிறார்களுக்கு முதல் நன்மை









( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றி அன்னையின் ஆலயப் பங்கில் ஞாயிற்றுக்கிழமை (12.06.2022) திருச்சபை இறை மக்களுக்கு வழங்கும் திருவருட்சாதங்களின் ஒன்றான முதல்நன்மை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பேசாலை பங்குத் தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவானது அருட்பணி எஸ்.ஜெயந்தன் பச்சேக் அடிகளாரின் முதன்மையில் அருட்பணியாளர்கள் ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் க.அருள்ராஜ் குரூஸ் அடிகளார் மற்றும் எஸ்.இயேசுபரநாதன் (டிக்சன்) அடிகளார் இணைந்து ஒப்புக்கொடுத்த இவ் கூட்டுத்திருப்பலியில் 80 சிறார்கள் இவ் முதல் நன்மையை பெற்றுக் கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட அமைப்பாளராக வினோகாந்த்



( காரைதீவு நிருபர் சகா)

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளராக வெள்ளையன் வினோகாந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவரும் சஜித் பிரேமதாச நியமனக் கடிதத்தை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வு கொழும்பு எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. வரலாற்று ரீதியாக தமிழர் ஒருவர் தேசிய கட்சியின் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் முறையாகும்.

இதே வேளை அமைப்பாளர் வி.வினோகாந்த் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசத்துக்கான இணைப்பாளராக பணியாற்றி வருகிறார்.

# குமுக்கன் காளிஅம்பாளுக்கு வைகாசிப் பொங்கல்

( காரைதீவு சகா)

கிழக்கு மாகாணத்தின் தென் கோடியில் உள்ள குமுக்கன் காளியம்மனுக்கு நேற்று முதல் முறையாக வைகாசி பொங்கல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

சித்தர்களின் குரல் சமஸ்தானத்தின் தலைவர் ஸ்ரீசங்கர்ஜி தலைமையிலான குழுவினர் குமுக்கன் காளிகாதேவி ஆலயத்திற்கு சென்று அங்கு அபிஷேகங்கள் செய்து வேப்பிலை அலங்கரித்து அங்கு பொங்கல் பொங்கி வழிபட்டார்கள் .

நாட்டிலே இயல்பு நிலை திரும்ப வேண்டும் மக்கள் சந்தோஷமாக வாழ வேண்டும் என்ற ரீதியிலே இந்த சிறப்பு வைகாசி பொங்கல் விழா அங்கு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சித்தர்கள் குரல் சமஸ்தானத்தின் காவல் தெய்வமாக விளங்கும் காளிகாம்பாள் விக்ரகசிலை அண்மையில் சித்தர் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ குழுவினரால் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காணி பகிர்வில் அந்த மாவட்ட விவசாயிகள் இளைஞர்கள் மற்றும் விவசாய நிலம் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்

( வாஸ் கூஞ்ஞ)

விவசாய மற்றும் வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் காணிகளை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கையை தாங்கள் முன்னெடுக்க இருப்பதால் அவைகளை அந்ததந்த மாவட்டத்தவர்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது தொடர்பான அமைச்சருக்கு தனது மடலின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விவசாய மற்றும் வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர ரூபன் அவர்களுக்கு திங்கள் கிழமை (13.06.2022) அனுப்பிவைத்துள்ள மடலில் தெரிவித்திருப்பதாவது;

தங்களின் அமைச்சின் கீழ் வரும் காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதாக பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளீர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ் பிரிவின்கீழ் நீங்கள் பகிர்தளிக்கும்போது கீழ்வரும் நடைமுறைகளை கவனத்தில் எடுத்துக்கொள்வது சிறந்ததாகும்.

அதாவது அந்தந்த மாவட்டத்தில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதல் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

விவசாயிகள் இளைஞர்கள் மற்றும் விவசாய நிலம் இல்லாத விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனவும் இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பெர்டினாண்டோ இராஜினாமா:

அழைத்து 500 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்ய அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் உடன் முன்மொழியப்பட்ட மன்னார் மற்றும் பூனேரி காற்று மற்றும் சூரிய சக்தி திட்டம் ஆகிய செயற்றிட்டங்களை அதானி நிறுவனத்திடம் வழங்குமாறு தெரிவித்ததாக கோப் குழுவில் ஆஜராகிய இலங்கை மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்ததுடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அழுத்தம் விடுத்ததாகவும் அவர் விசாரணையின் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் கோஷ்டி மோதலின் எதிரொலி வைத்தியசாலையில் நோயாளிக்கு மீண்டும் கத்தி குத்து

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நொச்சிக்குளத்தில் இடம்பெற்ற கோஷ்டி மோதலால் இரு சகோதரர்கள் உயிர் இழந்த நிலையில் இவ் கோஷ்டினரின் மோதலின் தொடர் கதையாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு நோயாளியின் மீது மீண்டும் கத்திக்குத்து.

இவ் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது;

கடந்த வெள்ளிக்கிழமை (10.06.2022) மன்னார் நொச்சிக்குளத்தில் உயிலங்குளத்தை சார்ந்த ஒரு கோஷ்டினருக்கும் நொச்சிக்குளத்தை சார்ந்த ஒரு கோஷ்டினருக்கும் இடையே இடம்பெற்ற கோஷ்டி மோதலில் உயிலங்குளத்தைச் சார்ந்த இரு சகோதரர்கள் வாள் வீச்சுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே மரணித்து இருந்தனர்.

அத்துடன் இவ் கோஷ்டி மோதலின்போது இரு பக்கங்களிலிருந்தும் மூவர் படுக்காயங்களுக்கு உள்ளாகி மன்னார் பொது வைத்தியசாலையில் கடந்த 10ந் திகதி (10.06.2022) அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் இதில் இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடிருந்த நொச்சிக்குளத்தைச் சார்ந்த ஸ்ரீதரன் (வயது 52) என்ற நபரும் ஒருவராவார்.

இவ் மூவரும் திங்கள் கிழமை (13.06.2022) வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட இருந்தாகவும் இந்த நிலையில் திங்கள் கிழமை (13) அதிகாலை 2 மணியளவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடிருந்த நொச்சிக்குளத்தைச்சார்ந்த ஸ்ரீதரன் (வயது 52) இவர் மீது கழுத்தில் கத்திக்குத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் இவர் உடன் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

கோஷ்டி மோதலில் காயப்பட்டிருந்தவர்களுக்கு துணையாக வந்து சென்றவர் ஒருவரே இவ் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனவும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் சம்பவத்தை தொடர்ந்து தங்கள் பாதுகாப்பை கருதி இவ் சம்பவம் தொடர்புடைய வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடிருந்த மூவரும் தங்கள் சொந்த விருப்பத்தின்படி வைத்தியசாலையை விட்டு வீட்டுக்குத் திரும்பி விட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரம் மேலும் தெரிவிக்கின்றது .

# ஜனாதிபதிக்கு சாதகமாக காணப்படும் 21 ஆவது திருத்தம்!

தரப்பினரின் ஆதரவு அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்துக்கு காணப்படுவதாக தான் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு திருத்தங்களுக்கு ஆதரவளிக்க ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்துக்கு ஆளுந்தரப்பு ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்த போதும், குறித்த வரைபு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பாரிய எதிர்ப்புகள் காணப்படவில்லை.

இதனிடையே குறித்த சந்தர்ப்பத்தில் இறுதி நேரத்திலேயே வரைபு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக அது குறித்து ஆராய்வதற்கு மேலதிக நேரம் தேவை என அமைச்சர்கள் கோரியிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், அரசியலமைப்பின் 21 ஆவது திருத்த வரைபு அமைச்சரவையில் இன்று கலந்துரையாடப்படும் என தான் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.



# இன்று காரைதீவில் கண்ணகை அம்மனுக்கு வைகாசிச்சடங்கு

வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டிதொட்டியெல்லாம் பறையொலி முழங்க குழல்நய ஓசையெழுப்ப வைகாசிப் பொங்கல் நடைபெறுவது வழமை. எனினும் கடந்த மூன்று வருட காலமாக சஹ்ரான் பிரச்சினை கொரோனாதாக்கம் போன்றவற்றால் வைகாசிப்பொங்கல் சோபிக்கவில்லை.

தற்போது பாரிய பொருளாதார நெருக்கடி என்றாலும் கண்ணகை அம்பாளிக் திருக்குளிர்த்தி சடங்கு சிறப்பாக நடைபெற்றுவருகிறது. கிழக்கில் பெரும்பாலான தமிழ்க்கிராமங்கள் இச்சடங்கினால் களைகட்ட ஆரம்பித்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை இவ்வைகாசித்திருவிழாச்சடங்கு ஆரம்பமாகியது. வடக்கில் வற்றாப்பளை கண்ணகை அம்மனாலயத்திலும் இச்சடங்கு சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

பூம்புகாரைத் தலைநகராகக்கொண்டு சோழ நாட்டிலே பிறந்து பாண்டியநாட்டிலே அரசியல் புரட்சி செய்து சேரநாட்டிலே தெய்வமாகிய கண்ணகை அம்பாள் சிங்கள மக்கள் மத்தியில் பத்தினித்தெய்யோ என இன்றும் வழிபட்டு வருவதைக் காணலாம்.

கண்ணகி வணக்கம் இலங்கையின் இரண்டு இனத்தாரிடையே (தமிழர்சிங்களவர்)வளர்க்கப்பட்டு வந்தது. கண்ணகை அம்மன் என்றும் பத்தினி தெய்யோ என்றும் வழங்கப்பட்டுவந்தது.

கண்ணகி தமிழரிடையே ஒரு புதுத் தெய்வமாக உருப்பெற்ற கதையை சிலப்பதிகாரம் சுவைபடக்கூறுகிறது.

வானோர்வடிவில் வந்த கோவலனோடு தெய்வ விமானமேறி கண்ணகி வானகம் சென்ற காட்சியைக் கண்ட வேடுவர்கள் அவளைத் தெய்வமாகப் போற்றினார்கள்.

'சிறு குடியீரே சிறு குடியீரே ...' என்ற சிலப்பதிகார குன்றக்குரவைப் பாடலைப் பாடி வேங்கை மரத்தின் கீழ் எடுத்த முதற் சடங்கு கண்ணகி சடங்காகும்.அதனையொட்டி கண்ணகி சடங்கு முறை வழக்கிற்குவந்தது.

சேரன்செங்கூட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்துவந்து கங்கையில் நீராட்டி அக்கல்லிலிருந்து கண்ணகியின் சிலை வடித்து தனது தலைநகராம் வஞ்சிமாநகரில் அமைத்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்தான்.அங்கு இந்திரவிழா எடுத்தான்.

இந்த விழாவிற்கு குடகக்கொங்கரும் மாளுவவேந்தனும் கடல்சூழிலங்கை கயவாகு வேந்தனும் வந்திருந்ததாக சிலப்பதிகாரம் கூறிநிற்கிறது.இச்சிலப்பதிகாரத்தையும் பழைய ஏடுகளையும் வைத்து கிழக்கில் பல காப்பியங்களும் நூல்களும் வெளிவந்தன

கண்டி அரசன் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் (1629-163%) பாடப்பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் 30 கண்ணகை அம்மன் ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.அவற்றில் அங்கணாமைக்கடவை (வெளியிலிருந்தும்) முதலூராகக் குறிப் படப்பட்டுள்ளது.எனவே அதுவே முதல் ஆலயமாகக் கொள்ளலாம்.

*'பட்டி நகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்*
*பவுசுபெறு கல்முனை கல்லாறெருவில் மகிளூர்*
*செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு*
*செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா*
*அட்ட திக்கும் புகழும் வந்தாறுமூலை நகர்*
*மட்டவிழ் பூங்குழல் மண்முனைக்*
*கண்ணகையை மனதில் நினைக்க*
*வினை மாறி ஓடிடுமே.'*

என ஊர்சுற்றுக்காவியம் கூறுகிறது.

இனி, கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மனின் வரலாறு சடங்கு பற்றிப் பார்ப்போம்.

## காரைதீவில் கண்ணகை அம்மன்

பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனின் திருக்குளிர்த்தி சடங்கு கடந்த திங்களன்று(6) கடல்நீர் எடுத்துவச்து கல்யாணக்காலர் நடலுடன் ஆரம்பித்தது. இன்று 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையவிருக்கிறது.

'அணியாரங் கற்பிற் அருங்கலமே நல்ல வணிகர் குலத்துதித்த மாதே- பணிமணியின் சேர் சிலம்பணியும் செல்வியே காரைநகர் தாயே எமைக் காத்தருள்' என்கிறது அம்மன் பாடல்.

சேரமன்னனின் அழைப்பின்பேரில் கடல்சூழ் இலங்கை மன்னன் கஜபாகு சென்றான் என்பது வரலாறு .

முப்பெரும் விழாவிற்கு சென்ற கஜபாகு மன்னனின் அழைப்பின்பேரில் சேரன் செங்குட்டுவனின் வழிவந்த சேனாதிராசனின் விதவை மகளான தேவந்தி அம்மையார் தனது மகள் சின்ன நாச்சியாருடன் கதிர்காம யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்து கண்டி மன்னரின் விருந்தினராக தங்கியிருந்த சில நாட்களின் பின்னர் யாத்திரையை மேற்கொண்டார்.

அம்மையார் தான் வரும்பொழுது தன்னுடன் பத்தினித் தெய்வத்தின் மூன்று சிலைகளை கொண்டு வந்ததாகவும் அவற்றில் இரு சிலைகள் அகோரவடிவுடையதாகவும் ஒன்று சாந்த சொரூபமான வடிவம் கொண்ட சிலையாகும் என்று கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

அம்மையாரின் யாத்திரை வழியில் ஏறாவூரில் அவர் அவருடைய சிலைகளில் ஒன்றினை ஸ்தாபித்து வழிபட்டார்.

பின்னர் மீதி இது சிலைகளுடன் காரைதீவு எனும் சைவமும் தமிழும் போற்றப்பட்ட பழம்பெரும் பதியில் வந்து தங்கினார் .தேவந்தி அம்மையார் காரைதீவில் விருந்தோம்பலில் கவரப்பட்டு தங்கியிருந்த வேளையிலே அங்குள்ள வேம்பு மரத்தின் கீழ் தான் கொண்டுவந்த இரு விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடு இயற்றினார் .

அந்த காலத்தில் கண்டி அரசனின் ராஜ பிரதிநிதியாகிய வன்னிமை அவரது மனைவி சகிதம் சிங்காரத் தோப்பில் இருந்து யானை மீதேறி நகர்வலம் வந்தார்.. அவர் அம்மையாரின் பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார். .அங்கு வன்னிமையின் மனைவியின் கண்ணொளி மங்க பெற்று அம்மையாரின் வேண்டிக்கொண்டதால் மீண்டும் கண்ணொளி பெற்றமை வரலாறு.

இதற்காக வன்னிமை அங்கு புனித ஆலயத்தை ஸ்தாபித்து அதனை நிர்வகிப்பதற்கு நூற்றி ஒரு ஏக்கர் நெல் காணிகளை நேர் கடனாக வழங்கினார்.இதனை' கண்கண் வெளி' என அழைப்பர். .இன்றும் அது உள்ளது.

கிராமத்தில் தேவந்தி அம்மையாரும் அவரது மகளான சின்ன நாச்சியாரும் வாழ்ந்து வருகையில் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த குடிமக்களின் பிள்ளைப் பேறு குறைந்துகொண்டு செல்வதனால் இதற்கு காரணமாக அமைந்த அமைந்த பத்தினி தெய்வத்தின் அகோர வடிவத்தை மக்களின் கோரிக்கையின் படி ஜனசந்தடி அற்ற பட்டிமேடு என்னும் கிராமத்தில் தேவந்தி அம்மையார் பிரதிஷ்டை செய்தார் .

அழகு நிறைந்த சின்னநாச்சியார் மீது மையல் கொண்ட இளைஞர்கள் அம்மையாருக்கும் அவரது மகளுக்கும் தொந்தரவு கொடுத்தனர். அதன் காரணத்தினால் சாந்த சொரூபமான பத்தினி தெய்வ விக்ரகத்துடன் தனது மகளுடனும் தம்பிலுவில் என கிராமத்திற்கு இடம் பெயர்ந்து விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்தார்.

இந்நிலையில் காரைதீவு கிராம மக்களுக்கு கொள்ளை நோய் அம்மை நோய் என்பது துயரங்களை கொடுத்தன .இதன் காரணமாக மக்கள் தம்பிலுவில்கிராமத்துக்குச் சென்று தேவந்தி அம்மையாரை மன்றாடி மீண்டும் காரைதீவுக்கு அழைத்து வந்து பத்தினி தெய்வத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்து அம்மையாரின் வேண்டுகோளின்படி கற்புக்கரசி கண்ணகி குளிர்விக்கும் பொருட்டு பொங்கலிட்டு பெருவிழா எடுத்தனர்.

இப்பெரு விழாவில் கொம்பு முறித்தல் போர்த் தேங்காய் உடைத்தல் தட்டு வசந்தன் போன்ற நிகழ்வுகள் நிகழ்ந்தன என்பது வரலாறு கூறும் செய்திகள் ஆகும்.

பெருவிழா வைகாசித் திங்களில் வருடா வருடம் ஆரம்பிக்கின்றது. முதல் நாள் பட்டயம் கூறுகின்ற நிகழ்வும் இடம்பெற்று வந்தது. வைகாசிப்பொங்கல் திருக்குளிர்த்தி குழுத்தி எனும் நாமங்கள் அழைக்கப்பட்டு வந்த இந்த சடங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறுவது அம்பாளின் அனுக்கிரகமே.

## திருக்குளிர்த்தி

பொதுவாக ஈழநாட்டிலுள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருவிழா தமிழ் மாத வைகாசி பவுர்ணமியில் இடம்பெறும் .ஆயினும் காரைதீவு மற்றும் வற்றாப்பளையில் கோயில் கொண்டிருக்கும் பத்தினி தெய்வத்தின் திருவிழா வைகாசி பௌர்ணமி திங்கட்கிழமை நடைபெறும். ஆயினும் திங்கட்கிழமை அல்லது வைகாசி பவுர்ணமியில் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட்கிழமை நடைபெறுவது மரபாகும்.

கண்ணகி வழக்குரையில்... 'வைகாசித் திங்கள் வருவேன் என்று '...என்று கூறுகின்றது. அதை அடியொற்றி திங்கள் என்பது பௌர்ணமியும் திங்கட்கிழமையும் குறிப்பதாகும்.

காரைதீவு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் தமிழ் மாதம் வைகாசி திங்கட்கிழமை நடைபெற்று வருவது மரபுவழி வந்ததாகும்.

## முதல் நாள் நிகழ்வு

இவ்வாலயத்தின் திருவிழாவானது குளிர்த்தி நடைபெறும் திங்கட்கிழமைக்கு முன்வரும் திங்கட்கிழமை அன்று சமுத்திர தீர்த்தம் எடுத்தவுடன் கல்யாண கால் நடுவது உடன் ஆரம்பமாகின்றது.

இங்கு கல்யாணகாலாக பூவரசம் மரமே தெரிவு செய்யப்படுவது மரபாகும்.

சமுத்திரத்திலே தீர்த்தம் எடுத்து வரும் பொழுது ஏலவே தெரிவுசெய்யப்பட்ட மெய்யன்பர் ஒருவரின் காணியில் உள்ள பூவரச மரத்தில் உள்ள பூவரசு மரத்தின் கிளையை ஆயுதம் பாவிக்காமல் முறித்து அதனை சமுத்திர தீர்த்தத்துடன் ஆலயத்திற்கு கொண்டு செல்வார்கள்.

ஆலயத்திலேயே பத்தினி தெய்வத்திற்கு முன்பாக பூவரசு மரககிளையை நட்டு கப்புகனார் கிரியைகள் செய்து கூறை சேலை அணிவித்து ஆலயத்தில் உணர்வு பூர்வமாக நடுவார்கள்.

அங்கு பூசைசெய்து முதல் நாள் நிகழ்வு நிறைவடையும்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கல்யாண காலுக்கும் அம்பாளுக்கும் பூஜைகள் நடைபெற்று பின்னர் உடுக்கை அடித்து ஊர் சுற்று காவியம் பக்தர்களால் பாடப்பெறும்.

மறுநாள் புதன்கிழமை தொடங்கி ஞாயிறு வரைக்கும் பகல் ஒரு மணிக்கு அம்பாளுக்கு பூசையும் மாலை 7 மணிக்கு மணிக்கு அம்பாளுக்கு உடுக்கை அடித்து ஊர்சுற்றுக்காவியம் பாடுதலுடன் 5 நாட்களில் நிகழ்வு நிறைவு வரும் .

ஐந்து நாட்களிலும் பத்தினி தெய்வத்தின் பகல்பூஜை செய்யும்போது அம்பாளுக்கு சோறும் கறியும் படைக்கப்படும். இதனை பச்சை கட்டுதல் என்று அழைப்பார்கள்.

இவ்வாலயத்தில் அம்பிகை அடியார்களுக்கு வழங்கப்படும் மரபுரீதியான சிறப்பான பிரசாதம் சோறும் கறியும் ஆகும் .

## குளிர்த்தி

இறுதி நாளான திங்கட்கிழமை முழு நாளும் பூஜைகள் இடம்பெறுவதில்லை. அன்றைய தினம் பக்தர்கள் நேர்த்திக் கடன்களை செலுத்துவார்கள் ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்தும் பெண்கள் கற்பூரச்சட்டி எடுத்தும் காவடி எடுத்தும் நேர் கடன்களை செலுத்துவார்கள்.

அன்றைய தினம் பக்தர்கள் உபவாசமிருந்து பத்தினி தெய்வத்திடம் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி விரதம் அனுஸ்டிப்பார்கள்.திங்கள் முழு நாளும் பக்தர்களால் சிலப்பதிகாரக் கதை பாடப்படும். இறுதிநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு அம்பாளுக்கு சிறப்பான விசேட பூஜை இடம்பெற்று தொடர்ந்து குளித்திபாடல் பாடி வழிபடுவர். பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மனை குளிர்விக்கும் பொருட்டு (குரச்சி) கலயத்தில் மந்திரிக்கப்பட்ட தூய நீரில் வெற்றிலை பாக்கு வாழைப்பழம் தாமரைப் பூக்கள் சிலம்பு அம்மானைக் காய் என்பவற்றுடன் அம்பாளின் தல விருட்சமான வேம்பு மரத்தின் பெறப்பட்ட இலைகளால் பாடல்களின் கருத்துகளுக்கு ஏற்ப கலயத்தில் எடுத்துச்செல்லப்படும் நீர் தெளிக்கபடும்.

அவ்வேளையில் இளட்டு திசைகளிலும் இருந்து வழிபடும் அம்பிகை அடியார்கள் மீது கலயத்தில் உள்ள தீர்த்தம் வேப்பிலைக் கொத்தால் தெளிக்கப்படும். இறுதியில் குளிர்த்தி பாடல்கள் பாடி முடித்ததும் கப்புகனாரால் மங்கல கீதம் பாடப்பெற்று சிறப்பு பூஜைகள் நடைபெறும்..

குளிர்த்தி முடிவடைந்ததும் பக்தர்களுக்கு தீர்த்தம் வழங்கப்படும்.

## எட்டாம் சடங்கு

குளிர்த்தி முடிந்து. அடுத்து வரும் திங்கட்கிழமை (20)அம்பாளுக்கு எட்டாம் சடங்கு இடம்பெறும். பிற்பகல் 3 மணியில் இருந்து கிராமத்து மக்கள் அங்கு தனித்தனியாக புதிய நெல்லில் இருந்து பெறப்பட்ட அரிசியை கொண்டு பொங்கலிட்டு நேர்த்தி செய்வார்கள். இது ஆலயத்தின் விசேஷமான அம்சம் என்பதை குறிப்பிடலாம்.

யாழ் நூல் தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாவையும் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தாவையும் இந்நாட்டிற்கு ஈன்றளித்த கற்பின் தெய்வம் கண்ணகி தாயை காரைதீவு தமிழ் கிராம மக்கள் குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபட்டு வருகின்றார்கள்.

பாரம்பரிய வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு நாட்டு மக்கள் மனங்களில் நம்பிக்கை மிகுந்த வாழ்க்கையை உருவாக்குவதாக.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)







# ஆசியாவில் ஓர் ஆபிரிக்க நாட்டை ஆட்சியாளர்கள் உருவாக்கி விட்டார்களா?



ஆசியாவில் மேலுமொரு சிங்கப்பூரை ஆக்கப்போவதாக வாய் வேட்டுகளைத் தீர்த்த இன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள் அதனைச் செய்ய முடியவில்லை.எதிர்மாறாக ஆசியாவில் ஒரு வங்குரோத்துமிக்க ஆபிரிக்க நாடொன்றினை உருவாக்கியுள்ளார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

மக்களின் வருவாய்கள் அதிகரிக்கப்படவில்லை.தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கப்படவில்லை.ஆனால் செலவீனங்கள் எதிர்மறையான திசையில் நகருகின்றன. வாழ்க்கைச் செலவு என்பது 300 சதவீதத்திலும் அதிகமாகியுள்ளது.எனவே, அதிகரித்த விலைவாசிகளில் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாதளவில் மக்களை வறுமை ஆட்டிப்படைக்கின்றது.எரிபொருள் எரிவாயு என்பவற்றின் அசுர விலையேற்றத்தாலும்,டொலர் பஞ்சத்தாலும் பொருட்களின் விலைகள் எகிறிப் பாய்ந்துள்ளன. தொழிலாளர் வர்க்கம் மட்டுமல்லாமல் மத்திய தர வர்க்கமும் வறுமையின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளது. பணவீக்கமானது 40 வீதத்தினைத்தாண்டியுள்ளது.உணவுப் பணவீக்கம் 5% வீதத்தினைத் தாண்டும் நிலையில் உள்ளது.இப்போதைய ஆட்சியாளர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்கும் போது டொலரின் பெறுமதி ரூபாய் 180 ஆகக் காணப்பட்டது.தற்போது டொலரின் பெறுமதி ரூபாய் 365 ஆக அதிகரித்துள்ளது,இதனால் பல இறக்குமதிப் பொருட்களை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இறக்குமதிப் பொருட்களுக்குப பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. எரிபொருட்களை மீதப் படுத்தும் நோக்குடன் ஈரிருளியை வாங்கச் சென்றால் அதன் விலை ரூபாய் 16,000 இல் இருந்து ரூபாய் 36,000 ஐக் கடந்து செல்லுகின்றது. ஓர் ஈரிருளியைக் கூட சொந்த நாட்டில் ஆக்க முடியாத நிலையில் எமது தொழில் நுட்பத்தினை எமது அடிப்படைவாத ஆட்சியாளர்கள் அடிமட்ட நிலையில் வைத்துக் கொண்டு,தம்மை வீரர் சூரர்களாக மார்தட்டுகின்றார்கள்.



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

**இனவழிப்புகள் காரணமாகவும், வருவாய்ப் பற்றாக்குறை,தொழில் வாய்ப்புகள் இல்லாமையாலும் நமது மனித வளங்கள் நாட்டை விட்டு வெளியேறிய வண்ணம் இருக்கின்றன. அதிலும் நாட்டின் மூளை வளங்களான புத்திஜீவிகளைக் கையாள முடியாததால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறித் தப்பிவிட்டார்கள். அவர்கள் அகதிகளாகிச் சென்றாலும் அந்நாடுகளில் குடியுரிமை பெற்று கௌரவமான அந்தஸ்துகளுடன் அந்நாடுகளின் சமபங்களளிகளாக இருந்து,நாட்டின் பொருளாதார விஞ்ஞான தொழில்நுட்ப அரசியல் துறைகளில் அபிவிருத்திகளைச் செய்து வருகின்றார்கள்.அந்நாடுகளில் ஆட்சியின் பங்காளிகளாக மட்டுமல்லாமல் ஆலோசகர்களாகவும் இருந்து ஆற்றலை வெளிப்படுத்துகின்றனர். அழித்து அச்சுறுத்தி வெளியேற்றப்பட்ட தமிழர்கள் கூட அங்கு பெருமதியான பெறுமதியான சேவைகளை அயல்நாடுகளில் ஆற்றுகின்றனர்.**

இனவழிப்புகள் காரணமாகவும், வருவாய்ப் பற்றாக்குறை,தொழில் வாய்ப்புகள் இல்லாமையாலும் நமது மனித வளங்கள் நாட்டை விட்டு வெளியேறிய வண்ணம் இருக்கின்றன. அதிலும் நாட்டின் மூளை வளங்களான புத்திஜீவிகளைக் கையாள முடியாததால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறித் தப்பிவிட்டார்கள். அவர்கள் அகதிகளாகிச் சென்றாலும் அந்நாடுகளில் குடியுரிமை பெற்று கௌரவமான அந்தஸ்துகளுடன் அந்நாடுகளின் சமபங்களளிகளாக இருந்து,நாட்டின் பொருளாதார விஞ்ஞான தொழில்நுட்ப அரசியல் துறைகளில் அபிவிருத்திகளைச் செய்து வருகின்றார்கள்.அந்நாடுகளில் ஆட்சியின் பங்காளிகளாக மட்டுமல்லாமல் ஆலோசகர்களாகவும் இருந்து ஆற்றலை வெளிப்படுத்துகின்றனர்.அழித்து அச்சுறுத்தி வெளியேற்றப்பட்ட தமிழர்கள் கூட அங்கு பெருமதியான பெறுமதியான சேவைகளை அயல்நாடுகளில் ஆற்றுகின்றனர்.

புத்திஜீவிகளை அழித்தவர்களால், அகற்றியவர்களால் தமது நாடுகளைக் கட்டியெழுப்ப முடியாது என்பதே எமது %4 வருட கால வரலாறாகும்.மதப்பெருமை தம் இனப்பெருமை என்று வரட்டுப்பெருமை பேசிப்பேசி நாட்டைக் குட்டிச் சுவராக்கியதுதான் நமது ஆட்சியாளர்களின் வரலாறாகியுள்ளது.சிலைகளில் முன்னைய ஆட்சியாளர்களின் தலைகளைக் காண முடியும்.ஆனால், நிலையான அபிவிருத்தி எதுவும் நடைபெற்றதில்லை. இன்றைய பிரதமரின் கருத்துப்படி ஆசியாவில் ஓர் ஆபிரிக்க நாடாக இலங்கை மாறியுள்ளது எனக் கூறியுள்ளார். வேறு எந்த நாடும் அப்படியான வங்குரோத்து நிலையில் ஆசியாவில் இல்லை என்றும் பிரதமர் கூறியுள்ளார். இரண்டரை வருட காலத்தில் இலங்கையை இந்த நிலைக்கு மாற்றிய வரலாற்றுப் பெருமை ராஜபக்ச அதிகாரத் தரப்பினருக்கு உண்டு. இன்று சிங்கள மக்களே அவர்களது தந்தையாரின் சிலையைக் கூட உடைத்துத் தகர்க்கும் நிலைக்கு மாறியுள்ளார்கள்.இது ஆத்திரத்தின் வெறுப்பின் உச்சநிலையாகும். தற்போதைய பொதுஜனப் பெரமுன அரசாங்கத்தின் அதாவது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் வரிக்கொள்கை,விவசாயக் கொள்கை, வெளியுறவுக்கொள்கை,சர்வதேச நிதி நிறுவனங்களுடனான உறவுக்கொள்கை,இறக்குமதிக் கொள்கை,



ஏற்றுமதிக் கொள்கை, உள்ளக பல்லிசைமூக உறவுக் கொள்கை,பங்காளிக் கட்சிகளுடனான உறவு,ராஜபக்ச சகோதரப் உறவுப்பிணைப்பு யாவும் தோல்வியடைந்துள்ளன.சிங்கப்பூரைக் காண விழைந்த இன்றைய ராஜபக்ச சகோதர ஆதிக்க அரசு,ஆசியாவில் ஒரு வறுமை வங்குரோத்துமிக்க ஆபிரிக்க தேசம் ஒன்றினை கண்டம் விட்டுக் கண்டம் கொண்டு வந்துள்ளது.

அப்படியெல்லாம் இருக்க தோல்வியடைந்த ஜனாதிபதியாக நான் போக மாட்டேன் என்று கோத்தபாய அவர்கள் பிடிவாதம் காட்டுகின்றார்.அக்கூற்றில் இருந்து அவர் தோல்வி அடைந்துள்ளார் என்பதை அவராகவே ஏற்றுக்கொண்டுள்ளார்.

அதேவேளை மைனா கோகம போராட்டத்தில் வெற்றி பெற்ற மக்கள்,கோட்டா கோகம போராட்டத்தை 60 நாட்கள் நெருங்கும் தறுவாயில் நகர்த்தியுள்ளார்கள்.ஜனாதிபதியின் பிடிவாதம் வெல்லுமா? பொருளாதார நெருக்கடிக்குள்ளான மக்களின் வெகுஜனப் போராட்டம் வெல்லுமா?என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.நாசமாப்போன கொக்கு கெழுத்தி மீனை விழுங்கியதாம்,தொண்டையில் முள் சிக்கியதால் துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியால் துடித்ததாம். அந்த நிலையில்தான் ஜனாதிபதி பதவியில் இருக்கவும் முடியாமல் துறக்கவும் முடியாமல் உள்ளார்.இப்போதாவது ஞானம் பிறந்தால் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வு கண்டால்,அதனைத்தமிழர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏற்றுக்கொள்வார்கள்.புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டின் கடனையும் அடைப்பார்கள்,நாட்டையும் கட்டி எழுப்புவார்கள்.இதனைத்தான் 20 ஆண்டுகள் போராடி ஓய்ந்த சிங்களச் சிப்பாய் ஒருவர் ஒலி ஒளி வடிவில் இணையத்தளமொன்றில் பதிவேற்றியுள்ளார்.அந்தப்பட்டறிவு ஆட்சியாளர்களுக்கு ஏன்தான் இன்னும் ஏற்படவில்லை.'கேடு வரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே'என்பார்கள். அடிப்படைவாதம் அதிகாரவர்க்கத்தின் மதிகளைக் கெடுத்து விட்டது.இதனால் நாடும் மக்களும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.இதுதான் யதார்த்த உண்மையாகும்.

# திருமலையில் டெங்கின் வீரியம் அதிகரிப்பு

## மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

உலகளவில் ஏற்படும் அனர்த்தங்கள் ஏதோ தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகிறது.இயற்கை அனர்த்தம் போல் ஏதோ ஒரு வகை நோய் மக்களை ஆட்டிப்படைக்கிறது கொரோனா வைரஸ் தாக்கம் போன்று டெங்குவின் தாக்கமும் திருகோணமலையில் ஆட்கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது . இதனால் மக்கள் அவதானமாக இருந்து தங்களை கொடிய நோயிலிருந்து பாதுகாக்கவும் முன்வர வேண்டும் பொடுபோக்காக இருந்தால் மரணங்களை சந்திக்க நேரிடும். கடந்த காலங்களில் 2014 ம் ஆண்டளவில் திருகோணமலை கிண்ணியா பகுதியில் 14 மரணங்கள் டெங்கினால் கர்ப்பிணி தாய் உட்பட காவு கொள்ளப்பட்டுள்ளது .



திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் தாக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக இந்த வருடம் திருமலை மாவட்



டத்தில் %%0 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளனர் இதில் திருகோணமலை கடற்படை தளத்தில் 111 நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் வீ.பிரேமானந் தெரிவித்தார். திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இதனை தெரிவித்தார்.

டெங்கு வீரியம் அதிகரிப்பு உயர் சிவப்பு வலயங்களாக திருகோணமலை,கிண்ணியா,மூதூர்,உப்புவெளி,குச்சவெளி போன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணங்காணப்பட்டுள்ளது. இதில் கிண்ணியா சுகாதார பிரிவில் ஆண் (வயது38) ஒருவர் டெங்கு நோய் காரணமாக மட்டக்களப்பு வைத்திய சாலையில் வைத்து மரணித்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை பகுதியில் 203 நோயாளர்களும், மூதூரில் 203, கிண்ணியா %%,உப்புவெளி %6 என டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ள நிலையில் கடந்த வருடம் (2021) 312 என்றவாறு நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையை விடவும் இம் முறை அது 770 ஆக அதிகரித்துள்ளது இதனை கருத்திற் கொண்டு அரசாங்கம் டெங்கு வாரமாக மே 18 தொடக்கம் 24 வரை பிரகடனப்படுத்தியுள்ளது இந்த நிலையில் சுகாதார தரப்புடன் முப்படையினர் இணைந்து டெங்கு ஒழிப்பு பணி இடம் பெற்றது .

இவ்வாறான கொடிய நோயிலிருந்து பாதுகாக்க பொது மக்கள் அவதானமாக செயற்படவும் தங்களது வீடுகள் காணிகளை சுத்தமாக வைத்திருக்கவும் பாவிக்காத மலசல கூடங்களை கவனமாக நீர்தேங்காத வண்ணம் சுத்தப்படுத்துவதுடன் வெற்றுக் காணிகளையும் உரிய நேரத்தினுல் சுத்தமாக பேணவும் அது போன்று பாடசாலைகள் அரச திணைக்களங்களில் தினசரி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சுத்தத்தை பேண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்களை கேட்டுக் கொள்வதுடன் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியரை நாடவும் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் இரத்த பரிசோதனையை மேற்கொள்ளவும்.

இதில் பொடுபோக்காக இருக்க வேண்டாம் . சில பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு பணியின் போது லாவா குடம்பிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன .

- **இதில் அவதானமாக மக்கள் செயற்படவும்**
- **வீடுகளில் நீரை சேமித்து வைக்கும் வாளி குடம் பரல்கள் தாங்கி என்பனவற்றிலும்**
- **மலசலகூட வாளி குளியலறை வாளி பக்கட்**
- **பறவைகளுக்கு நீர் வைக்கும் பாத்திரம்**
- **பக்குகள் தடாகங்களிலும் கினறுகளிலும்**
- **பாவிக்காத மலசலகூடங்கள்**

மூடப்படாத மலசலகூட குழிகள் சுற்றுப்புறங்களில் வீசப்பட்ட சிரட்டை பேனி யோகட் கப் போத்தல்களிலும் கீழே உள்ளன போன்று (தெறி புழு) போன்ற அமைப்பு காணப்படுகின்றனவா?

இவைதான் நுளம்பு குடம்பிகளாகும் என சுகாதார தரப்பு மக்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளது

### இதில் இருந்து பாதுகாக்க என்ன செய்யவேண்டும்?

நீர் தேங்கும் மற்றும் சேமித்து வைக்கப்படும் பாத்திரம்/பொருட்களில் உள்ள நீரை அகற்றி சுத்தம் செய்தல் வேண்டும்.



ஹஸ்பர் ஏ ஹலீம்

,நீரை சேமித்து வைக்கும் ஒவ்வொரு தடவையும் வாளி ,குடம் ,பரல்கள் ,தாங்கி என்பற்றை பழைய நீரை அகற்றி சுத்தம் செய்த பின்னரே புதிதாக நீரை சேமிப்பதுடன் பாதுகாப்பாக மூடி வைத்தல் வேண்டும்,

கினறுகளுக்கு கப்பிவகை மீன்கள் இடுவதுடன் சிறிய இடைவெளி கொண்ட வலை இட்டு மூட வோண்டும்.

பாவிக்காத கினறுகள் மற்றும் மூடப்படாத மலசலகூடகுழிகளுக்கு அபேட் இடல் வேண்டும்.

இவற்றையெல்லாம் சரிவர ஒவ்வொருவரும் உணர்ந்து செய்யும் போதே கொடிய ஆட்கொல்லி டெங்கிலிருந்து பாதுகாப்பெற முடியும்.

டெங்கு நோய் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க மக்கள் கரிசனையுடன் செயற்படுவதுடன் நுளம்பு தாக்கம் பரவாத வண்ணம் சூழலையும் அதனை அண்டியுள்ள பகுதிகளையும் சுத்தமாக பேண வேண்டும். வடிகான்களில் நீர் தேங்கி நிற்காத அளவுக்கும் லாவா குடம்பிகள் இல்லாதளவுக்கு நீரை வடிந்தோடக் கூடிய வகையில் சுத்தத்தை திறம்பட பேண வேண்டிய தருணமாக இருக்கிறது. திருகோணமலை நகர் பகுதியில் சில குடியிருப்பு நெருக்கமாக காணப்படுவதுடன் வடிகான்கள் துப்புறவற்ற நிலையில் உள்ளது இவ்வாறான விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் கண்காணித்து செயற்பட வேண்டும்.முப்படையினர் டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த களத்திற்கு சென்று செயற்படுவதுடன் சுகாதார தரப்புக்கள் டெங்கின் தீவிரத்தை கட்டுப்படுத்த புகை விசிறும் நடவடிக்கை என பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். பொது மக்கள் இந் நோயிலிருந்து பாதுகாக்க முன்கூட்டிய திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும் இல்லாது போனால் பல மரணங்களை சந்திக்க நேரிடும் .

















# உலக இரத்த தான தினம் ஜூன் 14

# உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்




உலக இரத்த தான தினமானது ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இரத்தப் பிரிவுகளான A, B, AB, O ஆகிய இரத்தப்பிரிவுகளைக் கண்டுபிடித்ததவரான (1900) கார்ல் லெண்டினர் அவர்களின் பிறந்த தினமான இன்று அவரை கௌரவப்படுத்தும் நோக்கில் உலக சுகாதார அமைப்பு 2004 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 14 ஆம் திகதியை உலக இரத்த தான தினமாக பிரகடனப்படுத்தியது. இரத்த தானத்தின் அவசியத்தையும், தானாக முன்வந்து இரத்த தானம் செய்பவர்களைப் பாராட்டும் விதத்திலும், இரத்த தானம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்தினை மையமாகக் கொண்டு இத் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இரத்தமானது குருதி, அரத்தம், ரத்தம், உதிரம், செந்நீர் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இரத்தம் என்பது, அனைத்து உயிரினங்களின் உடல் உயிரணுக்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை உடலின் அனைத்து பாகங்களுக்கும் எடுத்துச் செல்வதாகும். இவ்வாறு எடுத்துச் செல்வதற்கு குருதிச் சுற்றோட்டத் தொகுதி உதவுகின்றது. இரத்தமானது நாடி, நாளம் ஆகிய குருதிக்கலன்களிற்கு ஊடாக உடலின் அனைத்து பாகத்திற்கும் தேவையான ஊட்டத்சத்துக்கள் காவிக் கொண்டு செல்லப்படுகின்றது. அதாவது மூளைக்கும், உடலில் காணப்படுகின்ற அனைத்து உறுப்புக்களுக்கும் தேவையான ஒட்சிசன் மற்றும் ஊட்டச்சத்துத்துக்கள் போன்றவற்றை உடல் பாகங்களுக்கு எடுத்துச் செல்கின்றது. இவ்வாறு எடுத்துச் செல்வதோடு மட்டுமல்லாமல் உடல் கலன்களில் இருந்து வெளியிடப்படும் கழிவுகளான காபனீரொக்சைட், லாடிக்கமிலம் போன்றவற்றை உடலில் இருந்து அகற்றுகின்ற செயற்பாட்டையும் இரத்தமானது அல்லது குருதியானது மேற்கொள்கின்றது.

இரத்தமானது A, B, AB, O என நான்கு வகையாக பிரிக்கப்படுகின்றது. நமது இரத்தத்தில் பிளாஸ்மா, சிவப்பணு, வெள்ளையணு, இரத்தத்தட்டுக்கள் ஆகியவற்றுடன் ஆன்டிஜென் (Antigen), ஆன்டிபாடி (Antibody) போன்றவையும் காணப்படுகின்றது. இவற்றினை அடிப்படையாகக் கெண்டே இரத்தவகை பிரிக்கப்படுகின்றது. எந்தவகை ஆன்டிஜென் நம் இரத்தத்தில் இருக்கின்றதோ அதுவே நமது இரத்தவகையாகும். ஆன்டிஜென் என்பது எமது உடலில் இருக்கும் சிவப்பணுக்களிலுள்ள ஒரு வகை வேதிப்பொருளாகும். உதாரணமாக A வகை ஆன்டிஜென் இருந்தால் அது A வகை இரத்தம் எனவும், B வகை ஆன்டிஜென் இருந்தால் டீ வகை இரத்தம் எனவும், A, B ஆகிய இரு வகை ஆன்டிஜென் இருந்தால் யுடீ இரத்தவகை எனவும், யுஇ டீ வகை ஆன்டிஜென் இரண்டும் இல்லாமல் இருந்தால் அது ழு வகை இரத்தம் எனவும் அழைக்கப்படுகின்றது. நமது இரத்தவகைக்குப் பின்னால; (+) அல்லது (−) என்று ஏன் போடப்படுகின்றது என்று பார்த்தால் இதற்கு காரணம் சுா காரணியாகும். தெற்காசியா மற்றும் இந்தியக் காடுகளில் வாழும் ரீசஸ் வகை என்று அழைக்கப்படுகின்ற குரங்குகளின் இரத்தத்தில் காணப்படும் ஒரு வகை புரதப்பொருள் நம் உடலில் காணப்பட்டால் நமது இரத்தவகை பிரிவிற்குப் பின்னால் (+) போடப்படுகின்றது. அந்தக்குரங்கு இனத்தில் காணப்படும் புரதம் நமது உடலில் இல்லை என்றால் நமது இரத்தவகைக்குப் பின்னால் (−) என போடப்படுகின்றது. இவ்வாறு காணப்படும் இரத்தவகைக்கு மேலாக பாம்பே வகை இரத்தம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தவகை இரத்தம் பத்து லட்சம் பேர்களில் நால்வருக்குத்தான் இருக்கும்.

ஒவ்வொருவருக்கும் இரத்தத்தின் நிறம் ஒன்றுதான். ஆனால் இரத்தவகை வேறுபடுகின்றது. இரத்த ஓட்டம் இல்லாமல் நமது உடலின் எந்தப்பாகமும் சரியாக இயங்க முடியாது. இரத்த ஓட்டம் தடைப்பட்டால் எமது உடல் இயங்குவது முற்றாக தடைப்பட்டு விடும். இரத்தம் சரியாக இயங்குவதற்கு பல உறுப்புக்கள் துணை புரிகின்றன. உதாரணமாக எமது உடலில் காணப்படும் நுரையீரல் பாரிய பங்காற்றுகின்றது. இரத்தத்திற்கு தேவையான ஒட்சிசன் நுரையீரல் மூலமே கிடைக்கின்றது. அதேபோன்று இரத்தமானது அனைத்து உறுப்புக்களுக்கும் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கிய பின்னர் மீண்டும் திரும்பி வரும் போது காபனீரொக்சைட் கழிவினை நுரையீரல் பெற்றுக்கொண்டு மூச்சுவழியாக எமது உடலில் இருந்து வெளியேற்றுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் புகைப்பிடிப்பவர்களும், மது அருந்துபவர்களும் சற்று சிந்திக்க வேண்டும். இந்த பழக்கத்தினால் நுரையீரல் பாதிக்கப்படும். நுரையீரல் பாதிக்கப்பட்டால் இரத்த ஓட்டம் தடைப்படும். இதனால் உடல் இயங்காது.

இரத்தமானது மிகவும் முக்கியமாகும் இவ்வாறான இரத்தத்தினை தானம் செய்பவர்கள் மகத்தான மற்றும் மனிதாபிமான சேவையினை செய்கின்றனர். இரத்த தானத்தினை பலர் தாமாகவே முன்வந்து செய்வது வரவேற்கத்தக்கதாகும். அதுமட்டுமின்றி சில நினைவு தினங்களினை முன்னிட்டும் இரத்த தான நிகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது. இரத்த தானம் செய்யும் போது சில முக்கிய விடயங்களினை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். சரியான உடல் எடையையும், நல்ல ஆரோக்கியமான நிலையில் உள்ள அனைவரும் தானம் செய்யலாம். குறிப்பாகச் சொன்னால் 50 கிலோ எடைக்கு மேற்பட்டவர்கள் இரத்ததானம் செய்யலாம். ஆரோக்கியமாக உள்ள ஒருவர் 18 வயதுக்கு மேல் 60 வயது வரை குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு முறை 300 மில்லி இரத்ததை தானம் செய்ய முடியும்.

இப்படித் தானம் செய்யப்பட்ட இரத்தம் இரண்டு நாட்களுக்குள் அதாவது 24 முதல் 48 மணி நேரத்தில் மறுபடியும் எமது உடலில் ஊறிவிடும். இருப்பினும் ஒருமுறை இரத்ததானம் செய்தவர் குறைந்தபட்சம் மீண்டும் ஆறு மாதம் கழித்த பின்னர் இரத்த தானம் வழங்குவது மிகவும் சிறந்ததாகும். உடல் ஆராக்கியம் இல்லாமல் இருப்போர் இரத்தம் தானம் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாகச் சொன்னால் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் உள்ளவர்கள் இரத்தம் தானம் செய்வது அவர்களின் உடலுக்கு நல்லதல்ல. மேலும் அடிக்கடி மயக்கம் வருபவர்கள், உடல் பலவீனமானவர்கள், எந்தவொரு சிறிய வேலை செய்தாலும் உடனடியாக களைப்படைபவர்கள், கொடிய தொற்றுநோய் உள்ளவர்கள் இரத்தானம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக கர்ப்பிணிப் பெண்கள் இரத்தம் தானம் செய்வதை முற்றாக தவித்தல் அவசியமாகும், தான் கர்ப்பிணி இல்லை என்று (ஆரம்பத்தில்) கூறி பிறரது உயிரைக்காப்பாற்றுவதற்காக இரத்தம் தானம் செய்ய முன்வருவது பெரிய பாதிப்பினை சந்திக்க வேண்டிய நிலைக்கு ஆளாகக்கூடும்.

இரத்தம் தானம் செய்யப்போகின்றவர்கள் கூடுதலான இரத்தம் எடுத்துவிடுவார்களோ என்று பயந்து கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. ஒருவரிடம் சராசரியாக ஒரு யூனிட் அதாவது 350 மில்லி லீற்றர் இரத்தம் மட்டுமே சராசரியாக எடுக்க முடியும். அது மட்டுமின்றி இரத்ததானம் செய்வதற்கு பயப்படவோ அல்லது பதற்றப்படவோ தேவையில்லை. இரத்தம் வழங்குவது பாதுகாப்பானது. அது மட்டுமின்றி எமது உடல் ஆரோக்கியத்திற்கு இரத்தம் தானம் செய்வது சிறந்ததாகும்.

இவ்வாறு ஒருவரிடமிருந்து எடுக்கப்படும் குருதியை சேமித்து வைக்கும் பொறுப்பு இரத்த வங்கிக்கு கொடுக்கப்படுகின்றது. ஒருவர் தானம் செய்யும் இரத்தத்தைச் சேகரித்து, அணுக்களைப் பகுத்துப் பதப்படுத்தி, சேமித்து இரத்தம் தேவைப்படுபவர்களுக்கு வழங்குகின்ற நிறுவனம் இரத்த வங்கியாகும். தானமாக பெற்ற இரத்தத்தை குளிர்சாதனப் பெட்டியில் 4 டிகிரி செல்சியஸில் வைத்து குறைந்தது 30 – 42 நாட்கள் வைத்து பாதுகாக்கலாம். இந்த நாட்களுக்குள் எடுக்கப்பட்ட இரத்தம் பாவிக்கப்பட வேண்டும்.

விபத்தின் போது அதிக குருதி தேவைப்படுபவர், பிரசவத்தின் போது குருதி தேவைப்படுபவர், அனர்த்தங்களினால் பாதிக்கப்படுபவர்கள் போன்ற பலருக்கு இரத்தம் தேவைப்படுகின்றது. உடனடியாக இரத்தம் தேவைப்படும் போது இரத்த வங்கியில் இரத்தம் இல்லாத சந்தர்ப்பத்தில் யாராவது இரத்தம் வழங்க முன்வரும் போது, தான் எந்த வகை இரத்தப்பிரிவினருக்கு இரத்தம் வழங்கலாம் என்பது பற்றிய அறிவும், தெளிவும் காணப்படுவது அவசியமாகும். அவசர நிலைமைகளின் போது இரத்தத்தினை சோதித்து வருவதற்குள் இரத்தம் தேவைப்பட்டவரது உயிர் போய் விடும் என்பதற்காக வைத்தியர்களும், தாதிமார்களும் இரத்தம் தானம் செய்ய வருபவரினது கருத்தினை நம்பிக்கொண்டு குருதி தேவைப்படுபவர்களுக்கு குருதி பாய்ச்ச வேண்டிய சூழ்நிலை சில சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடும். இவ்வாறான நிலைமைகளின் போது இரத்தம் தானம் செய்ய வருபவர் தான் எந்த இரத்த வகையைச் சேர்ந்தவர் என்பதை உறுதியாக கூற வேண்டும். அது மட்டுமில்லாது தான் எந்த பிரிவினருக்கு இரத்தம் வழங்கலாம், தான் யாரிடம் இருந்து இரத்தம் பெற்றுக் கொள்ளலாம் என்ற போதிய அறிவு காணப்படுவது அவசியமாகும்.

இவ்வாறு இரத்தம் யாருக்கு கொடுக்கலாம், யாரிடமிருந்து இரத்தத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றிய தெளிவு இருப்பது அவசியம். அனைத்து இரத்த வகைகளின் விபரம் தெரியாவிட்டாலும் தன்னுடைய இரத்த வகை யாருக்கு கொடுக்கலாம், யாரிடமிருந்து இரத்தம் பெற்றுக் கொள்ளலாம் என்ற அடிப்படை அறிவு காணப்படுவது மிக முக்கியம். இவ்வாறு தெரிந்து கொள்வது அவசர நிலைமைகளின் போது இரத்தம் தேவைப்பட்டால் இரத்தம் தானம் செய்வதற்கு மிக பயனுடையதாக இருக்கும்.

உதாரணமாக O வகை இரத்தம் உள்ளவர்கள் யாருக்கும் இரத்தம் கொடுக்கலாம் என்ற கருத்து உள்ளது. ஆனால் O+ உள்ளவர்கள் Rh (-) உள்ள எந்த இரத்தவகை (A-, B-, AB-, O-) பிரிவினருக்கும் இரத்தம் வழங்க முடியாது. மாறாக ழு- இரத்தப்பிரிவினர் யாருக்கு வேண்டுமாலும் இரத்தம் வழங்கலாம். இதனால் O- இரத்தம் பொது வழங்கி (Universal Donor) என அழைக்கப்படுகின்றது. அதேபோன்று AB+ வகை இரத்தப்பிரிவினர் யாரிடமும் இருந்து இரத்தம் பெற்றுக் கொள்ளலாம். இதனால் AB+ இரத்தவகை பொது வாங்கி (Universal Acceptor) என அழைக்கப்படுகின்றது.

அவரச நிலைமைகளின் போது இரத்தம் கொடுக்க வந்தவரது இரத்தவகை மாதிரியை பரிசோதித்துப் பார்க்காது அவரது கருத்தினைக் கொண்டு இரத்தம் தேவைப்படுபவர்களுக்கு உடனடியாக இரத்தம் பாய்ச்சுவது ஆபத்திலே போய் முடியும். காரணம் எந்தவகை ஆன்டிஜென் நம் இரத்தத்தில் உள்ளதோ, அதன் எதிர்வகை ஆன்டிபாடி நம் இரத்தத்தில் இருக்கும். உதாரணம் A வகை இரத்தப்பிரிவினருக்கு A வகை ஆன்டிஜெனும், B வகை ஆன்டிபாடியும் காணப்படும். அதேபோன்று B வகை இரத்தப்பிரிவினருக்கு B வகை ஆன்டிஜெனும், A வகை ஆன்டிபாடியும் காணப்படும். இதுபோலதான் ஏனைய இரத்தப்பிரிவினருக்கும் ஆன்டிஜென், ஆன்டிபாடி வேறுபடும். ஆன்டிபாடி என்பது இரத்த பிளாஸ்மாவில் உள்ள ஒரு வகை வேதிப்பொருளாகும். ஒரேவகை ஆன்டிஜென் மற்றும் ஆன்டிபாடி சேரும் போது இரத்தத்தில் கலந்தால் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டு இரத்தத்தினை உறையச் செய்கின்றது. இவ்வாறு இரத்தம் உறைவதால் இரத்த ஓட்டம் நின்று விடுவதோடு, உயிராபத்தையும் ஏற்படுத்தும்.

இரத்த தானம் செய்வது மிகவும் முக்கியமான மகத்தான சேவையாகும். நாம் வழங்கும் இரத்த தானமானது எங்கேயோ ஒரு மூலையிலுள்ள ஒருவரின் உயிரைக் காப்பாற்றுவதோடு மட்டுமில்லாது, அவரை நம்பி வாழ்கின்ற குடும்பத்தினை காப்பாற்றுவதற்கும் உதவுகின்றது. உதாரணமாக துவிச்சக்கரவண்டி மூலம் வியாபாரம் செய்கின்ற கூலி வேலை செய்பவர் விபத்தில் சிக்கினால் அவருக்குத் இரத்தம் தேவைப்படுகின்ற போது, அது நீங்கள் தானம் செய்த இரத்தமாக இருக்கலாம். இந்த சந்தர்ப்பத்தில் தானமாக வழங்கிய இரத்தம் அந்த கூலிவேலை செய்கின்ற நபரைக் காப்பாற்றுவதோடு, அவரை நம்பி வாழ்கின்ற குடும்பத்தினையும் வாழ்விப்பதற்கான மகத்தான சேவையாக அமையும். இரத்த தானம் என்பது அனைவருக்கும் தேவைப்படுகின்ற மிக முக்கிய விடயமாகும். அது எந்த நேரத்தில் யாருக்குத் தேவைப்படும் என்று உறுதியாக கூற முடியாது. எப்போதும், எந்தநொடியும் யாருக்கும் தேவைப்படலாம். இரத்தத்தினை தானம் செய்ய பயமில்லாமல் முன்வர வேண்டும் இரத்தம் தானம் செய்வதால் நமது உடலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. மாறாக எமது உடல் மேலும் ஆரோக்கியமடையும். ஆகவே இரத்தத்தினை தானம் செய்து பிறர் உயிரைக்காப்பாற்றும் ஒவ்வொரு உள்ளங்களுக்கும் பத்திரிகை சார்பான மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்
சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக்கற்கை
கிழக்குப் பல்கலைக்கழகம்



# சேட்டிபாளையத்து கவிஞன் மயில்வாகனம் அவர்களின் படைப்புலகம்

## செட்டியூர் சிந்தனை செல்வன் மயில்வாகனம் பற்றி அவரது 32 வது சிரார்த்த தினத்தில் விசேட பதிவு



ஈழத்து இலக்கிய வரலாறு நீண்டதொரு பாரம்பரியத்தையும் வரலாற்று பின்புலத்தையும் கொண்டது. ஈழத்துப் பூதந்தேவனாரில் தொடங்கி இன்று எழுதிவிட்டால் இலக்கியமென்றும் எழுத்தாளர்களென்றும் கொண்டாடப்படும் ஜாம்பவான்களையும் களத்தில் கொண்டுள்ள இலக்கியப்பின்புலத்தில் கவிஞர் மயில்வாகனம் பற்றிய பார்வை நிச்சயம் மட்டக்களப்பில் இலக்கியப்படைப்பாளிகள் தொடர்பான பார்வையில் ஒரு மறு அத்தியாயத்தை உருவாக்கலாம்.

துரதிஸ்ரவசமாக படைப்பிலக்கியங்கள் காலவோட்டத்தில் கரைந்து போவதென்பது நியதியாகிவிட்ட சூழலில் கவிஞர் மயில்வாகனத்தின் படைப்புகளில் பெரும் பகுதியை இயற்கை முற்றாகவே கபளீகரம் செய்து விட்ட சூழலில் எஞ்சிய சிலவற்றுள் பல முழுமையாக கிடைக்காமை மிகப்பெரும் துயரம்.

வாழும் போது மட்டுமன்றி தான் வாழ்வின் பின்னரும் கறையான்களுக்கும் இயற்கையின் இலக்கியப்பசிக்கும் இரையிட்ட மயில்வாகனத்தின் படைப்புகள் போக எஞ்சியவை தொடர்பான பார்வையை செலுத்த விளைந்தால் மட்டக்களப்பு படைப்புலகம் மற்றும் மட்டக்களப்பு படைப்பாளிகள் அல்லது கவிஞர்கள் எனும் பட்டியலுக்குள் எப்படி மயில்வாகனம் காணாமல் போனார் என்பது மில்லியன் கேள்வி?

‘‘இலக்கியம் என்றதும் அது சராசரி மனிதர்களைப் போல இல்லாத அசாதாரண காவிய நாயகர்களைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்ற கருத்து ஏதோ பழங்காலத்தில் இருந்திருக்கலாம். உண்மையில் இலக்கியம் என்பது சாதாரண வாழ்க்கையில் சாதாரண நிகழ்ச்சிகளின் சில தருணங்களில் எப்படி சராசரி மனிதர்கள் தங்களையறியாமலே கூட காவிய நாயகர்களுக்கு சமமானவர்களாக உயர்ந்து நிற்கிறார்கள் என்பதை உணர்த்துவதுதான்’ என்பார் எழுத்தாளர் ஞானி இதனை அவரது தத்துரூபமான படைப்புகளில் காணலாம்.

அதே போல ‘ஒரு எழுத்தாளனின் படைப்புகளின் தரத்தை அளவிடுவதற்கான அளவுகோலாக அவனுடைய உணர்வின் நுட்பம் (அல்லது கூர்மை ),அவனுடைய சமூகம் எந்த வகையில் பாதிப்புக்கு உள்ளானது என்ற இவ்விரண்டும் ஓரளவு கடந்தகாலச் சாதனைகளால் நிர்ணயிக்கப்படுபவை. ஒரு தீவிரக்கலைஞன் எளிய சாதனைகளை தன் அளவு கோலாக ஏற்க மாட்டான். மிகச் சிறந்ததை விடச் சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதே அவனுடைய குறிக்கோளாக இருக்கும்’ என்பார் எழுத்தாளர் அசோகமித்திரன்.

இவ்விரண்டு தமிழ் படைப்புலக ஜாம்பவான்களின் கருத்தியலுக்கும் வலுச்சேர்ப்பவையாக கவிஞர் மயில்வாகனத்தின் படைப்புலகத் தாக்கம் இருப்பதை சில உதாரணங்களுடன் பேசலாம் என என் மனம் எண்ணுகிறது.

இவரது பெரும்பாலான படைப்புகள் நான் ஏலவே கூறியது போல் இயற்கையின் கோரப்பசிக்கு இரையாகிப் போன பின்னரும் அந்த படைப்புகளை தென்னிந்திய சினிமாப் பாடல்களுக்கு நிகராய் இன்றும் முணு முணுக்கும் ஒரு ரசிகர் கூட்டம் மட்டக்களப்பில் உண்டு. அந்த வகையில் ‘சோழியன் குடும்பி சும்மா ஆடாது’ எனும் நகைச்சுவை ததும்பிய நவீன சீர்திருத்த நாட்டுக்கூத்து ஒலிநாடாக்களில் பதிவு செய்யப்பட்டு மட்டக்களப்பின் பல வீடுகளில் அன்று தென்னிந்திய சினிமாப்பாடல்களுக்கு நிகராய் ஒலிபரப்பப்பட்டதனை யாரும் மறுக்க முடியாது.

அதே போல் இவரது ‘பொன்னம்பலப்போடியார்’ நவீன நாட்டுக்கூத்து மட்டக்களப்பில் ஏற்படுத்திய தாக்கம் இன்றைய தமிழ் சினிமாவின் முன்னிலை நாயகர்களின் படங்கள் வெளிவந்த போது ஏற்படுத்தும் தாக்கம் போல் அன்று அந்த நவீன நாட்டுக்கூத்தினைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் மேடைகளின் முன்னால் அலை மோதியதாக அதில் பங்கு பற்றி நடித்திருந்தவர்கள் கூறுவதை கேட்கும் போது வியப்பாகவே உள்ளது. அம்பிளாந்துறை,வெல்லாவெளி,பண்டாரியாவெளி என நீண்டு செல்லும் இக்கூத்து மாவட்டம் கடந்து பாண்டிருப்பிலும் அரங்கேறியிருக்கிறது.(தகவல் -க.புவனேசசிங்கம் அம்பிளாந்துறை, பொன்னம்பல போடியார் கூத்தின் நாயகன் பொன்னம்பல போடியாராக நடித்தவர்) ஒன்றரை மணித்தியாலங்கள் நீளமான இந்த நவீன நாட்டுக்கூத்து பன்னிரண்டு கதாபாத்திரங்களை கொண்ட கவிஞர் மயில்வாகனத்தின் உன்னதமான படைப்புகளில் ஒன்று.

தமிழாசான் செந்தில்நாயகத்தின் நெறியாழ்கையில் பட்டி தொட்டியெங்கும் பேசப்பட்ட இந்தக்கூத்தின் பின்புலத்தில் கனகரத்தினம்,கறுத்தான் (பெயர்கள் பேச்சு மொழி சார்ந்தவை) போன்றவர்களது பங்களிப்பு அபரீதமானது என்கிறார்கள் அதில் நடித்தவர்கள். அதே வேளை இந்த நவீன நாட்டுக்கூத்தானது இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னரான காலப்பகுதியில் கூட மீண்டும் நடிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது பொன்னம்பலப் போடியார், தலைவிதி,உண்மையை சொல்லுகிறேன் ,மாறாத நீதி,நிலவுப் பெண்,நதி நங்கை,புதுயுகம் படைப்போம்,போன்ற படைப்புகளுடன் உதிரியான பல சிதைந்த கவிதைகளுமாய் எஞ்சியிருக்கும் அவரது படைப்புகள் ஆய்வுக்குட்படுத்த வேண்டியது மட்டக்களப்பு படைப்பாளிகளுக்கு இருக்கும் தலையாய பொறுப்பாகும்.

இடம்பெயர்வு,இயற்கையின் காலவோட்டத்தில் போக எஞ்சிய இவரது படைப்புகளை எடைபோடும் போது ஏற்படும் கனதி மிகப்பெறுமதியானது. இவரது அனைத்து படைப்புகளும் முழுமையாக கிடைத்திருப்பின் மட்டக்களப்பில் 80 களுக்குப்பிறகான இலக்கியப்படைப்புலகத்தில் கவிஞர் மயில்வாகனம் எனும் பெயரின் பின்னரான வரிகளில்தான் மட்டக்களப்பு படைப்பாளிகள் இடம்பிடித்திருக்கக்கூடும் என்பது என் கருத்து. அந்தளவுக்கு அவரது படைப்புகள் கனதியானவையாக இருக்கிறது. எதிர்காலத்தில் இவரது எஞ்சி இருக்கின்ற படைப்புகள் வெளிவருவது மிகவும் அசியமானது மட்டுமன்றி காலத்தின் தேவையும் கூட.

இடம்பெயர்வு,இயற்கையின் காலவோட்டத்தில் போக எஞ்சிய இவரது படைப்புகளை எடைபோடும் போது ஏற்படும் கனதி மிகப்பெறுமதியானது. இவரது அனைத்து படைப்புகளும் முழுமையாக கிடைத்திருப்பின் மட்டக்களப்பில் 80 களுக்குப்பிறகான இலக்கியப்படைப்புலகத்தில் கவிஞர் மயில்வாகனம் எனும் பெயரின் பின்னரான வரிகளில்தான் மட்டக்களப்பு படைப்பாளிகள் இடம்பிடித்திருக்கக்கூடும் என்பது என் கருத்து. அந்தளவுக்கு அவரது படைப்புகள் கனதியானவையாக இருக்கிறது. எதிர்காலத்தில் இவரது எஞ்சி இருக்கின்ற படைப்புகள் வெளிவருவது மிகவும் அசியமானது மட்டுமன்றி காலத்தின் தேவையும் கூட.

கவிஞர்.கு.உமாறமணன்
அம்பிளாந்துறை

# ஒரு குடும்பத்தால் கொள்ளையடிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நமக்குள்ளது!

முழு உரிமமாக ஒரு குடும்பம் நாட்டை எழுதி எடுத்துக் கொண்டு முழு நாட்டையும் கொள்ளையடித்ததாகவும், இரண்டு வருடங்களாக நாடு ராஜபக்ஸவாதத்தையும் குடும்பவாதத்தையுமே பின்பற்றியதாகவும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



புதிய நவீனத்துவ ஒரு இலங்கையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட மறுசீரமைப்புக்கான மக்கள்இயக்கம் எதிர்க்கட்சித் தலைவர்சஜித் பிரேமதாஸ உட்பட முக்கியஸ்தர்கள் பலரை இன்று(13) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்தனர்.

மறுசீரமைப்புக்கான மக்கள் இயக்கம் முன்வைத்த முன்மொழிவுகளில் பெரும்பாலான முன்மொழிவுகளுக்கு,ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் இணங்குவதாக தெரிவித்தஎதிர்க்கட்சித் தலைவர், இந்த கருத்தாடலை பரவலாக முன்னெடுக்கும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர்அலுவலக வளாகத்தில் செயலக அலுவலகமொன்றை ஸ்தாபிப்பதற்கும் அதற்குத் தேவையான வளங்களை பெற்றுக் கொடுப்பதற்கும் இணக்கம் தெரிவித்தார்.

இணக்கப்பாட்டின் மூலம் நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதைவிடுத்து நாட்டைக் கட்டியெழுப்ப வழியே இல்லை எனவும் தெரிவித்தார். தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு அரசியல் காரணிகள் பங்களித்துள்ளன எனவும், நாட்டைக்கட்டியெழுப்புவதற்கு வலுவான மற்றும் நிலைபேறான சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்தஎதிர்க்கட்சித் தலைவர்,

இனவாதம்,பொறுப்பற்றவாதம், தீவிரவாதம்,வர்க்கவாதம்,மதவாதம் என்பன ஒழிக்கப்பட வேண்டும் எனவும்,முற்போக்கான அறிவொளிப்பயணத்தைத் தொடங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பிற்போக்குத்தனமான சிந்தனைகளை விடுத்து,அறிவார்ந்த சிந்தனைகளை அணிகலனாகக் கொண்டுசெயற்பட வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இன்று இந்நாட்டை இத்தகைய பாதாளத்தில்தள்ளிவிட்டது சர்வாதிகாரவாதமே எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் கடந்த இரண்டரை வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட தோல்வியடைந்த ஆட்சியினால் 225 பேரும் வேண்டாம் என்ற கருத்தோட்டம் உருவாகியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,ஆனால் அதுமுற்றிலும் அவ்வாறே அமைந்து விடாது எனவும் அவர் தெரிவித்தார்.

